# பாட்டாளி சிந்தனை

Volume 33 No 1

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்)

SUCI (Communist)

September 2022

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ 5


## பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர்

# தோழர் சிப்தாஸ் கோஷ்

## பிறந்த நூற்றாண்டு துவக்க விழா (05.08.1923–05.08.2023)






**தேனியில் ஆகஸ்ட் 11, 2022 அன்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் மத்தியக்கமிட்டி உறுப்பினர், தோழர் ஜெய்சன் ஜோசப் சிறப்புரையாற்றுகிறார். இடது: கூட்டத்தில் கலந்துகொண்டோர்**

பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவரும் இக்காலகட்டத்தின் தலைசிறந்த மார்க்சிச சிந்தனையாளர்களில் ஒருவரும் சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்) கட்சியின் ஸ்தாபகருமான தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டு துவக்க விழா பொதுக்கூட்டம் தேனியில் ஆகஸ்ட் *11, 2022* அன்று மாலை நடைபெற்றது. கூட்டத்திற்கு மத்தியக்கமிட்டி உறுப்பினரும் தமிழ்நாடு மாநிலச் செயலாளருமான தோழர் ஆ ரெங்கசாமி தலைமையேற்க, மற்றுமொரு மத்தியக்கமிட்டி உறுப்பினர் தோழர் ஜெய்சன் ஜோசப் சிறப்புரை ஆற்றினார்.

துவக்கத்தில் கட்சியின் புதிய இரண்டு நூல்கள் தமிழாக்கம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டன. அவை, 'பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர் தோழர் சிப்தாஸ் கோஷ்' என்ற அவர் வாழ்க்கையைப் பற்றிய சிறு நூலும், அவரே பேசிய 'இளைஞர்களுக்கு' என்ற நூலும் ஆகும்.

கூட்டத்தில் தலைமை உரையாற்றிய தோழர் ரெங்கசாமி, மாபெரும் தலைவர் சிப்தாஸ் கோஷ் *1923* ஆகஸ்ட் *5* அன்று பிறந்தார் என்றும் இவ்வாண்டு முதல் அவரது பிறந்த நூற்றாண்டு துவக்க விழாவாக இக்கூட்டம் நடைபெறுகிறது என்றும் கூறி தனது உரையைத் துவங்கினார். பள்ளி வாழ்க்கையில் சிறந்த மாணவனாக விளங்கிய தோழர் சிப்தாஸ் கோஷ் படிப்பை உதறிவிட்டு சுதந்திரப் போராட்டத்தில் இறங்கினார். வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின்போது அனுசீலன் சமிதி என்ற அமைப்பில் இருந்த அவர் கைது செய்யப்பட்டார். சிறை வாசத்தின்போது பல்வேறு இடதுசாரி அரசியல் தலைவர்களுடன் விவாதத்தில் ஈடுபட்டார். அப்போது சுதந்திரப் போராட்டம் பிரதானமாக மிதவாதிகளான காந்தியின் தலைமையில் இருப்பதையும், இடதுசாரி சோசலிஸ்டுகள் அதில் பின்னடைந்திருந்ததையும் அவர் கண்டார். சுதந்திரத்தின் மூலம் பிரிட்டிஷ் முதலாளித்துவ ஏகாதிபத்தியவாதிகள் ஆட்சி அதிகாரத்திலிருந்து அகற்றப்பட்டு இந்திய முதலாளிகள் அதிகாரத்தைக் கைப்பற்றப் போகிறார்கள் என்பதை உணர்ந்தார். ஆனால் அன்றைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அடிப்படையில் ஒரு கம்யூனிஸ்ட் கட்சியாக

தொடர்ச்சி 2ம் பக்கம்

# அகில இந்திய விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்கள் சங்கத்தின் வெற்றிகரமான முதல் மாநில மாநாடு




**செப்டம்பர் 03, 2022 திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டில் அகில இந்திய விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்கள் சங்க முதல் மாநாடு**

அகில இந்திய விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்கள் சங்கம் ஏஐகேகேஎம்எஸ் (All India Kissan Keth Mazdoor Sangatan) அமைப்பை *1948*ல் நம் நாட்டில் ஸ்தாபித்தவர் பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவரான தோழர் சிப்தாஸ் கோஷ் ஆவர். இந்திய விவசாயிகளின் அனைத்துப் பிரச்சினைகளுக்குமான மூல காரணத்தை அவர் வெகு காலத்துக்கு முன்னரே கண்டறிந்து அனைத்துவகை சுரண்டல்களி லிருந்தும் நம் நாட்டு விவசாயிகள் விடுதலை அடைவதற்கான போராட்டத்தை வளர்த்தெடுக்க வழிகாட்டினார்.

அதன்படி, விவசாயிகள் உள்ளிட்ட பாடுபடும் வெகுஜனங்களின் அன்றாடப் பிரச்சினைகளுக் காகப் போராடி அவர்களிடையே ஓர் புரட்சிகர விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இச் சங்கத்தின் பிரதான நோக்கமாக உள்ளது. *2019* ஆண்டு தமிழ் நாட்டுக்கான ஏஐகேகேஎம்எஸ் தயாரிப்புக்கு கமிட்டியும். அதன்கீழ் தேனி, திண்டுக்கல், புதுக்கோட்டை, சேலம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் ஏஐகேகேஎம்எஸ் அமைப்பை

தொடர்ச்சி 7ம் பக்கம்

## தோழர் சிப்தாஸ் கோஷ் பிறந்த நூற்றாண்டு துவக்க விழா

# உலக கம்யூனிச இயக்க வரலாற்றில் தோழர் சிப்தாஸ் கோஷ் மதிப்புமிக்க இடம் பெறுகிறார்

*1ம் பக்கத் தொடர்ச்சி*

*கட்டப்படாததால் அதிகாரம் உழைக்கும் மக்களுக்குக் கிடைக்காது என்பதையும் உணர்ந்தார். எனவே ஒரு உண்மையான கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கும் முயற்சியில் தோழர் கோஷ் இறங்கினார் என தோழர் ரெங்கசாமி குறிப்பிட்டார். அன்று மேற்கு வங்கம் 24 பர்கானா மாவட்டத்தில் துவக்கப்பட்ட எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்), இன்று படிப்படியாக வளர்ந்து 22 மாநிலங்களில் செயல்படுகிறது. ஒருபுறம் விலையேற்றம், வேலையின்மை ஆகியவை பெருகுகின்றன. மறுபுறம் இந்திய கார்ப்பொரேட் நலன்களுக்கான கொள்கைகள் போடப்படுகின்றன. விவசாய விரோத வேளாண் சட்டங்களும், தொழிலாளர் விரோத நடவடிக் கையாக 44 தொழிலாளர் பாதுகாப்புச் சட்டங்களை 4 ஆக குறுக்கியும் கொண்டுவரப் பட்டுள்ளன. மக்களின் ஜனநாயக உரிமைகள் பறிக்கப்படுகின்றன. சர்வதேச அளவிலும் உக்ரைன் நாட்டில் போர், சீனாவின் தைவான் தீவிலும் போருக்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடக்கின்றன.*

*இன்று ரஷ்யாவும் சீனாவும் மார்க்சிசத்திற்கு விரோதமான கொள்கைகளைக் கடைப்பிடித்து எதிர்ப்புரட்சி மூலம் முதலாளித்துவ நாடுகளாக மாறி சக்திவாய்ந்த ஏகாதிபத்திய நாடுகளாக உலகை அச்சுறுத்துகின்றன. முதல் உலகப் போரின் முடிவில் சோவியத் ரஷ்யா தோன்றியது. இரண்டாம் உலகப் போரின் முடிவில் கிழக்கு ஐரோப்பிய நாடுகள், சீனா, வியட்நாம், கொரியா ஆகிய கிழக்காசிய நாடுகள் எல்லாம் சோசலிச நாடுகளாக உருவாகின. இன்று உலகில் போர் அபாயம் மீண்டும் தலை தூக்கிவிட்டது. இச்சூழலில் போருக்கு எதிராக அமைதியை விரும்பும் மக்களை ஒன்றுதிரட்டி உலகில் சமாதானத்தைத் திணிக்க போர்க்குணமுள்ள மக்கள் இயக்கம் தேவையாகும். ஏகாதிபத்தியப் போரை உள்நாட்டுப் போராக மாற்றி புரட்சியை நடத்த வேண்டும் என்ற லெனின் கூற்றுப்படி சோசலிசப் புரட்சியை உலகெங்கிலும் முன் னெடுக்க தோழர் சிப்தாஸ் கோஷ் சிந்தனையை பரப்ப வேண்டும். ஏற்கெனவே அவரது சில முக்கியமான புத்தகங்கள் ஃபிரஞ்ச் உட்பட பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. சர்வதேச அளவில் தோழர் கோஷ் படைப்புகள் வரவேற்பைப் பெற்றுள்ளன. அவரது பிறந்த நூற்றாண்டைக் காணும் இவ்வேளையில் மேலும் பல படைப்புகளை உலக அளவில் எடுத்துச் செல்வதுடன் நமது நாட்டிலும் புரட்சியை நடத்த அவரது படிப்பினைகளை ஆழ்ந்து பயின்று மக்கள் இயக்கங்களை மேலும் வளர்ப்போமாக என தோழர் ரெங்கசாமி தனது உரையை முடித்தார்.*

*தோழர் ஜோசப் ஜெய்சன் தனது சிறப்புரையில், மாபெரும் தலைவர் சிப்தாஸ் கோஷின் பிறந்த நூற்றாண்டை கொண்டாடும் இவ்வேளையில் ஒரு யதார்த்தத்தை நாம் உணர வேண்டும் என்றார். தோழர் சிப்தாஸ் கோஷ் பெயர் இந்தியா முழுமைக்கும் இன்னமும் பிரபலமாகவில்லை. எங்கெல்லாம் நமது இயக்கம் பணியாற்றுகிறதோ, நமது புத்தகங்கள், கட்சிப் பத்திரிகைகள் விற்பனையாகிறதோ அந்த அளவிற்கு அவரது பெயர் அறியப்பட்டுள்ளது. ஆனால், அவரது படிப்பினைகளை ஆய்வுகளை, பங்களிப்புகளை அறியும் போது அத்தகைய தலைவரது பெயர் எல்லா இந்தியர்களுக்கும், உலகமுழுதும் உழைக்கும் மக்களின் இயக்கத்தை நடத்துபவர்களுக்கும் தெரியப்படுத்த வேண்டும் என்ற உணர்வு ஆழமாக எழுகிறது. 1950களிலேயே உலக கம்யூனிச இயக்கத்திற்கு அவர் வழங்கிய ஆய்வுகளை, தனிமனிதவாதத்தை, திருத்தல் வாதத்தை, எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளை எதிர்த்து அவர் விடுத்த எச்சரிக்கைகளை, ஸ்டாலின், மாவோவிற்குப் பிறகு மார்க்சிய லெனினிய சித்தாந்தத்தை விளக்கி உரைத்து வழங்கிய பங்களிப்புகளை நோக்கும் போது உலக கம்யூனிச இயக்க வரலாற்றில் அவருக்கு மதிப்புமிக்க இடம் கொடுக்கப்பட வேண்டும். ஆனால், அவற்றையெல்லாம் அறிந்தவர்கள் நம்மைத் தவிர, நம் நாட்டில் வெகுசிலரைத் தவிர வேறுயாருமில்லை. நமது நாட்டில் பாட்டாளி வர்க்க புரட்சியை நடத்துவதன் மூலம்தான் அம்மாபெரும் தலைவருக்கு உரிய இடத்தைப் பெற்றுத்தர இயலும். அதற்கு, அவரது படிப்பினைகளை தொழிலாளர்கள் விவசாயிகள் என பரந்துபட்ட இந்திய மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும். அவர் நமது தலைவர் என்பதால் அல்ல; அது இக்காலத்தின் தவிர்க்கயியலாத தேவை என்பதாலாகும்.*

*மார்க்சிச லெனினிச கருவூலத்திற்கு தோழர் சிப்தாஸ் கோஷின் பங்களிப்புகள் என்னென்ன என்பதை தொகுத்து வெளியிடும் முயற்சிகள் கட்சித் தலைமையால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இருப்பினும் ஒருசில அம்சங்களை இங்கு கூற விழைகிறேன். ஒரு கம்யூனிஸ்ட்டின் தரம் எது என்பதைக் குறித்து லெனின் வரையறுக்கிறார்: 'யார் தனது தனிப்பட்ட நலனை இரண்டாம் பட்சமாகவும் சமூக, வர்க்க மற்றும் கட்சி நலனை முதன்மையானதாகவும் கருதி தன்னை கட்சிக்குச் சமர்ப்பிக்கிறாரோ அவரே நல்ல கம்யூனிஸ்ட்'. தோழர் சிப்தாஸ் கோஷ் இந்த வரையறையை அன்றைய காலகட்டத்தில், தனிமனித சுதந்திரம் என்பது முற்போக்காக நிலவியபொழுது, சரியாக இருந்தது என்றார். ஆனால் முதலாளித்துவ ஏகாதிபத்தியம் சீரழிந்துவிட்ட இன்றைய காலத்தில், தனி மனித சுதந்திரம் தனிநபர் சலுகையாக சீரழிந்துவிட்ட காலத்தில், தனிமனிதவாதமும் சுயசார்பு (Selfcentered) சிந்தனையும் சுயநலமும் ஓங்கியிருக்கும் இன்றைய காலகட்டத்தில் ஒருவர் கட்சிக்கு சமர்ப்பித்துக் கொண்டால் மட்டும் போதாது; தனது சொந்த நலனை, சமூக, வர்க்க, கட்சியின் நலனுடன் ஐக்கியப்படுத்திக்கொள் பவரே சிறந்த கம்யூனிஸ்ட் என தோழர் சிப்தாஸ் கோஷ் கூறினார். அவரே தனது வாழ்க்கைப் போராட்டம் மூலம் அத்தகைய உயர்ந்த தரத்தை எட்டினார்.*

*அது மட்டுமல்ல, தன்னுடன் போராட்டத்தில் இணைந்திருந்த தோழர்களையும் இந்தப் போராட்டத்தில் ஈடுபடுத்தி, சிறந்த கம்யூனிஸ்டு களாக, வாழ்முறைப் புரட்சியாளர்களாக அவர் உருவாக்கினார். சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு 1945ல் சிறையில் இருந்த அவர் பிற போராட்டக் கைதிகளுடன் தத்துவார்த்த விவாதங்களை நடத்தினார். அப்பொழுது சிபிஐ மற்றும் பல்வேறு சோசலிஸ்ட் ஆதரவாளர்களும் இவரைப் பார்த்து, நீ மிகவும் புத்திசாலியாக இருக்கிறாய், எங்களைப் போல் சிறையில் படித்து பரீட்சையில் தேறி பட்டம் பெற்றால், விடுதலையானபிறகு வேலைக்குச் சென்று கூடவே புரட்சிக்கும் வேலை செய்யலாமே' என்று அறிவுறுத்தினர். கம்யூனிஸ்டுகள் என்று அறியப்பட்ட அவர்களின் தரம் அப்படித்தான் அன்றே இருந்தது. மார்க்சிசம் லெனினிசம் என்ற தத்துவம் வெறும் அரசியல் பொருளாதாரத் துறைக்கு மட்டுமானதல்ல, அது வாழ்க்கைக்கும் வழிகாட்டும் தத்துவம் எனக் கூறிய தோழர் கோஷ், ஒருவர் தனது பழைய முதலாளித்துவ வாழ்க்கைக் கண்ணோட்டத்தை மாற்றிக் கொள்ளும் போராட்டத்தில் ஈடுபட்டு குறைந்த பட்ச சோசலிசக் கலாச்சாரத்தை எட்டவில்லை என்றால், ஒரு கம்யூனிஸ்டாக உருவாக முடியாது என கூறினார்.*

*இவ்வாறாக தோழர் சிப்தாஸ் கோஷ், இப்போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மிகச் சில உற்ற தோழர்களுடன் 1948ல் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி அமைப்பைத் துவக்கினார். அவர்கள் எந்த ஆதாரமும் இன்றி, இருக்க இடமின்றி, பல நாட்கள் உணவின்றி நமது நாட்டில் அக்கட்சியை ஒரு உண்மையான பாட்டாளிவர்க்க புரட்சிகரக் கட்சியாக வளர்த்தனர். எந்த ஆதாரமும் இல்லாமல், பிரசித்தி பெற்ற தலைவர்கள் யாருமில்லாமல், உலக கம்யூனிஸ்ட் கட்சிகளின் அங்கீகாரமில் லாமல் வளர்த்தார். ஏற்கெனவே இந்திய கம்யூனிஸ்ட் கட்சி என ஒன்று இருக்கும்போது எப்படி உங்களால் இந்தக் கட்சியை வளர்க்க முடியும், அது சாத்தியமா என சிலர் அவரைக் கேட்டனர். அதற்கு, **"முடியாது என்றே வைத்துக் கொள்வோம். வேறு எதைச் செய்வது? இந்தப் போராட்டத்தைக் கைவிட்டுவிட்டு வழக்கமான அடிமை வாழ்க்கைக்கு நாமும் அடிபணிந்து போவதா? அல்லது ஒரு கம்யூனிஸ்ட் கட்சியாக இல்லாத இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் போய்ச் சேருவதா? இப்படி நம் மனசாட்சிக்கு நாம் துரோகம் இழைக்கத்தான் வேண்டுமா? புரட்சிக்காக வேறு எதையும் என்னால் செய்ய முடியாவிட்டாலும் கூட, கட்சி அடித்தளத் திற்கான முதற் கல்லையாவது நான் எடுத்து வைப்பேன். எதிர்காலத்தில், மற்றவர்கள் புரட்சிகரக் கட்சியின் மேல்தளத்தை அதன் மேல் எழுப்பிக் கொள்வார்கள். கனவு களோடும், ஆசைகளோடும், உயிரோடு இருக்கின்ற ஒவ்வொரு கணமும் எனது வாழ்க்கையின் அர்த்தம் என ஒன்றைத்தான் அறிவேன். நான் உயிரோடு இருக்கும்வரை ஒரு புரட்சியாளனாகவே இருப்பேன். நான் தெருவில் இறக்க நேர்ந்தால் அதையும் எதிர்கொள்வேன். இந்தியப் புரட்சிக்கு அது அவசியமாயிற்று என எண்ணிக்கொள்வேன். இறக்க நேர்ந்தால் தலை நிமிர்ந்து பெருமிதத்துடன் இறப்பேன்"** என தோழர் கோஷ் பதிலுரைத்தார்.*

*ஒரு கம்யூனிஸ்ட் கட்சியைக் கட்டுவதற்கு லெனினிச கட்சிக் கோட்பாட்டை கடைபிடிக்க வேண்டும் என்ற வழிகாட்டுதலைப் பின்பற்றிய அவர், அந்தக் கோட்பாட்டில் உள்ள கூட்டுத்தலைமை குறித்த புரிதலை மேலும் விளக்கியுரைத்தார். சித்தாந்த மத்தியத்துவத்தின் அடிப்படையில் ஸ்தாபனம் ஒரு மையமாக இயங்க, கூட்டுத் தலைமையை கம்யூனிஸ்ட் கட்சி உருவாக்க வேண்டும் என்றார். கட்சிக்குள் தோழர்கள் சுய விமர்சனத்தின் அடிப்படையில் விமர்சனம் செய்ய வேண்டும் என்ற நெறியை வலியுறுத்திய தோழர் சிப்தாஸ் கோஷ் இந்த விவாதத்தின் போக்கில் 'கம்யூனிஸ்ட் நடத்தை நெறி' என்ற உயரிய படைப்பை புரட்சியாளர் களுக்கு வழங்கினார். ஒரு உண்மையான கம்யூனிஸ்ட் கட்சியை வளர்த்தெடுக்கும் மேற்கண்ட முறைகளைப் பின்பற்றி எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியை உருவாக்கினார். இதைத்தான் 'கட்சி, இயக்கயியல் முறையின் படைப்பு' என்று அவருடைய உற்ற தோழரும் அவருக்குப் பின் பொதுச் செயலாளராக இருந்தவருமான தோழர் நிஹார் முகர்ஜி விளக்கினார்.*

*தோழர் சிப்தாஸ் கோஷ் தனது 26 வயதிலேயே, சர்வதேச கம்யூனிஸ்டுகளுக்கு திருத்தல்வாதத் தலைமை செய்யும் தவறுகளைச் சுட்டிக்காட்டி லெனின், ஸ்டாலின், மாவோ வழிகாட்டுதல் களைப் பின்பற்ற வேண்டும் என்ற அறைகூவலை திறந்த மடலாக எழுதி விடுத்தார். சோவியத் ரஷ்யா உட்பட பல்வேறு நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்குள்ளும் இயந்திரகதியிலான உறவுமுறை நிலவுவதாகவும் மாறாக இயக்கயியல் உறவுமுறை இருக்கவேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். கட்சிக்குள் ஒருவர் சேரும்போது பல்வேறு முதலாளித்துவ குணாம்சங்களுடன்தான் வருகிறார் ஆனால் தலைவர்கள் அவரிடம் நற்குணங்களைளையும் நிறைகளையும் கண்டு பாராட்ட வேண்டும். அதன் பிறகே அவரிடம் குறைகளை நயந்து கூறி எடுத்துக் காட்ட வேண்டும். மூத்த தோழர்கள் இளை யோரை தங்கள் பிள்ளைகள் போல் கருதி அன்பும் அக்கறையும் காட்ட வேண்டும். ஒற்றுமையையும் வளர்ச்சியையும் நோக்கமாகக் கொண்டு, சுய விமர்சனமும் விமர்சனமும் செய்ய வேண்டும். இதுவே இயக்கயியல் உறவு முறையின் சாராம்சமாகும். இது இல்லை என்றால்*

தொடர்ச்சி 6ம் பக்கம்

# தைவான் ஜலசந்தியில் உச்சக்கட்டப் போர் பதற்ற நிலை

ரஷ்ய அமெரிக்க ஏகாதிபத்திய நாடுகளுக் கிடையே தீவிரமாக நடந்துவரும் உக்ரைன் போர் என்று தணியும் என உலகமக்கள் கவலை யுற்றிருக்கும் வேளையில் புதிதாக, தென்கிழக்குச் சீனக் கடலில் உள்ள தைவான் ஜலசந்தியில் சீன, அமெரிக்க நாடுகளுக்கிடையே சில வாரங்களாக நடந்துவரும் ராணுவப் பயிற்சிகள் உலக முழுவதும் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. ஐரோப்பாவின் எண்ணெய்ச் சந்தையைப் பிடிப்பதற்காகவும், ராணுவத் தளவாடங்களை விற்பதற்கு புதிய சந்தையை உருவாக்கவும், உள்நாட்டில் வேலையின்மை வறுமை ஆகிய பிரச்சினைகளால் கொந்தளிக்கும் மக்களின் கவனத்தை திசை திருப்பி தேசிய வெறி உணர்வை தூண்டுவதற்கும் அமெரிக்காவும் ரஷ்யாவும் அரை வருடகாலமாக நடத்திவரும் உக்ரைன் யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். மக்களின் உடைமைகளும் பொதுச் சொத்துக்களும் அழிக்கப்பட்டுள்ளன. உணவு, பெட்ரோலியப் பொருட்களின் விலையேற்றத்தால் உலக மக்கள் பஞ்சத்தில் வீழ்ந்து கொண்டிருக்கின்றனர். இந்நிலை மாறுவதற்குள் மற்றுமொரு போருக்கான ஆடுகளமாக தைவானை ஆக்க, சீன, அமெரிக்க ஏகாதிபத்திய நாடுகள் முயற்சிக்கின்றன.

### சோவியத் ரஷ்யாவும் சோசலிச சீனாவும் எதிர்ப்புரட்சியின் மூலம் ஏகாதிபத்திய நாடுகளாக மாறி உலகை அச்சுறுத்தத் துவங்கி விட்டன

மாபெரும் தலைவர் லெனின் அவர்களால் உலகில் முதன் முதலில் பட்டாளி வர்க்கப் புரட்சி நடத்தப்பட்டு ரஷ்யா, ஜார்ஜியா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், பைலோரஷ்யா, லத்வியா, லித்துவேனியா, உக்ரைன் ஆகியவை உள்ளிட்ட 13 தேசிய இனங்களை சோசலிச கொள்கை அடிப்படையில் ஒன்று சேர்த்து சோவியத் சோசலிச குடியரசு 1917ல் உருவாக்கப்பட்டது. உலகத் தொழிலாளர்களிடையே நம்பிக்கையையும் பெருமிதத்தையும் உருவாக்கிய சோவியத் குடியரசு, மக்களின் பங்கெடுப்பால் வேகமாக வளர்ச்சி பெற்று, இரண்டாம் உலகப் போரில் ஹிட்லரின் ஃபாசிச ஜெர்மனியின் தலைமையிலான ஏகாதிபத்திய சக்திகளை தவிடுபொடியாக்கி, உலக சமாதானத்திற்கான ஒரு பாதுகாப்பு அரணாக விளங்கியது. இந்தியா உட்பட பல பின்தங்கிய நாடுகளின் வளர்ச்சிக்கு தொழில்நுட்பங்களை வழங்கி ஆதரித்தது. ஆனால் மாபெரும் தலைவர் ஸ்டாலினுக்குப் பின் வந்த குருச்சேவ் என்ற திருத்தல்வாதி, முதலாளித்துவக் கொள்கைகளை படிப்படியாகப் புகுத்தினார். ரஷ்யாவில் லெனினிடம் அதிகாரத்தைப் பறிகொடுத்த அந்நாட்டு முதலாளித்துவ வர்க்கம் இதைச் சரியாகப் பயன்படுத்திக்கொண்டது. இறுதியில் 1990ல் கோர்பச்சேவ் என்ற திருத்தல்வாதி, எதிர்ப்புரட்சியை நடத்தி முதலாளித்துவ வர்க்கத்தை அதிகாரத்திற்கு கொண்டுவந்து விட்டார். உட்கட்டுமானம், ராணுவம், தொழிற்துறை ஆகியவற்றில் முன்னேறி இருந்த ரஷ்ய நாடு முதலாளிகளின் கைகளுக்கு மாறியவுடன், ஏகபோக முதலாளித்துவம் படுவேகமாக வளர்ந்து ஏகாதிபத்தியமாக மாறி இன்று உலகை அச்சுறுத்தி வருகிறது.

சீனாவிலும் மாபெரும் தலைவர் மாவோ ஆங்கிலோ அமெரிக்க, ஜப்பானிய ஆட்சியாளர் களை எதிர்த்த சுதந்திரப் போராட்டத்தில் முதலாளித்துவ குவமின்டாங் கட்சியுடன் இணைந்து ஆனால் பாட்டாளிகளை விவசாயிகளை கம்யூனிஸ்ட் கட்சியின் கீழ் திரட்டி 1949ல் மக்கள் ஜனநாயகப் புரட்சியை நடத்தினார். அதன் மூலம் சீனா சோசலிச நாடாக உருவானது. இந்தியாவை விட பின்தங்கியிருந்த சீனா, சோசலிசப் பொருளாதார அமைப்பில் மிக வேகமாக வளர்ச்சி பெற்று பல கிழக்கு ஆசிய நாடுகளை சோசலிசமாக மாற உதவி செய்து சீனாவும் உலக சமாதானத்திற்கு பாதுகாப்பு அரணாக விளங்கியது. ஆனால் மாவோவிற்குப் பின் வந்த டெங் சியோபிங் திருத்தல்வாதியின் கொள்கைகளால் சீன முதலாளித்துவ வர்க்கம் படிப்படியாக வளர்ச்சி பெற்று 2004ஆம் ஆண்டு எதிப்புரட்சியை முழுமையாக நடத்தி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிவிட்டது. அந்த ஆண்டு சீனாவின் அரசியல் அமைப்புச் சட்டத்தில் சோசலிச அடிப்படைக் கோட்பாட்டிற்கு எதிராக, தனிச் சொத்தை அங்கீகரித்து திருத்தம் செய்யப்பட்டது. சீன முதலாளிகள் இன்று ஏகபோக முதலாளிகளாக, ஏகாதிபத்தியவாதி களாக வளர்ந்து அங்குள்ள தொழிலாளர்களின் உரிமைகளைப் பறித்து கடுமையாகச் சுரண்டி பொருட்களை மலிவாக உற்பத்தி செய்து உலக சந்தையைப் பிடித்து வருகின்றனர்.

ரஷ்யாவிற்கும் சீனாவிற்கும் உள்ள ஒரே வேறுபாடு, ரஷ்யாவில் எதிர்ப்புரட்சி மாற்றம் வெளிப்படையாக நடந்தது. கம்யூனிஸ்ட் கட்சியின் பெயர், கொடி ஆகியவை எதிர்ப்புரட்சி யாளர்களால் கைவிடப்பட்டன. புட்டின் கட்சியின் பெயர் யுனைடெட் ரஷ்யாவாகும். ஆனால் சீனாவில், கம்யூனிஸ்ட் பெயரையும் செங்கொடி யையும் மாவோ சிலையையும் உருவப்படங் களையும் அப்படியே வைத்துக் கொண்டு சீன கம்யூனிஸ்ட் கட்சி முதலாளித்துவ வர்க்கக் கட்சியாக மாறிவிட்டது. இதனை மேலோட்டமாகப் பார்க்கும் உலகின் பல்வேறு இடதுசாரிகள், இந்தியாவின் சிபிஐ, சிபிஎம் உடபட, சீனாவை இன்னமும் சோசலிச நாடாக கருதுவது வேடிக்கையாகும்.

### தைவானின் வரலாறு

தென்கிழக்குச் சீனக் கடற்கரையிலிருந்து தைவான் 100 மைல் தொலைவில் உள்ள தீவாகும். இத் தீவிற்கும் சீனாவிற்கும் இடையே உள்ள பாஷி நீர்வழித்தடம், இந்தியப் பெருங்கடலுக்கும் பசிபிக் பெருங்கடலுக்கும் சீனாவை இணைக்கும் சர்வதேச லூஜான் ஜலசந்தியின் முக்கியக் கடல் வழித்தடமாகும். இதன் வழியாகத்தான் வணிக மற்றும் கடற்படைக் கப்பல்கள் உலகைச் சென்றடைய முடியும். இன்று சுமார் 2.35 கோடி மக்கள் தொகை கொண்ட தைவான், 17ஆம் நூற்றாண்டில் சீனா முழுமையும் ஆட்சி செய்த குயிங் மன்னர் பரம்பரை ஆட்சியின் கீழ் வந்தது. 1895ல் சீனா ஜப்பான் போரில் குயிங் தோற்று, சீனாவின் பல பகுதிகளுடன் தைவானும் ஜப்பானிடம் சென்றுவிட்டது. இரண்டாம் உலகப் போரில் ஜப்பான் தோல்வியுற்றதால் 1945ல் சியாங் காய்ஷேக் தலைமையிலான கொமின்டாங் ஆட்சியின் கீழ் சீனா வந்த பொழுது தைவானும் மீட்கப்பட்டது. ஆனால், மாவோவின் தலைமையில் சீனாவில் புரட்சி 1949ல் வெற்றியடைந்து சீன மக்கள் குடியரசு (Peoples Republic of China PRC) பீஜிங்கில் நிறுவப்பட்ட போது, முதலாளித்துவ தேசிய கட்சியான கொமின்டாங் கட்சித் தலைவரான கம்யூனிச விரோதி சியாங் காய்ஷேக் தைவான் தீவில் ஓடி ஒளிந்துகொண்டார். தைவானை சீன குடியரசு (Republic Of China ROC) எனவும், சீனாவும் அதன் ஆட்சியின் கீழ்தான் வருகிறது என்றும் கூறிக்கொண்டு சியாங் காய்ஷேக் பல பத்தாண்டுகளாக தைவானை ஆட்சி செய்தார். தொடர்ந்து அங்கு உள்நாட்டுப் போர் நடைபெற்று பின்னால் அத்தீவில் முதலாளித்துவ ஜனநாயகம் அரைகுறையாக நிறுவப்பட்டது. மாபெரும் தலைவர் மாவோ இப் பிரச்சினையை அமைதிப் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க முயற்சி செய்தார். தீர்வை எட்டுவதிலும் அமுலாக்குவதிலும் சியாங் காய்ஷேக்கிற்குக் கூட ஒரு பாத்திரத்தை பிரதான சீன நாட்டின் அரசியலில் வழங்க முன்வந்தார். ஆனால் சியாங் காய்ஷேக் சோசலிசத்தை முழுமையாக எதிர்த்தார். சோசலிசத்தை தூக்கியெறிந்து மொத்த சீனத்தையும் அவர் ஆக்கிரமிப்பேன் என்பதைத் தவிர வேறு தீர்வுகளை ஏற்க மறுத்தார்.


எதிர்ப்பார்த்ததுபோல, அமெரிக்கா உட்பட ஏகாதிபத்திய நாடுகள் தைவானுக்கு ஏராளமான பொருளாதார உதவி அளித்து சீனாவை விட தைவான் மக்களின் தனிநபர் வருவாய் அதிகமாக இருப்பதாக காட்டியது. கைமாறாக, தைவானை அமெரிக்கா தனது கப்பல் படையை நிறுத்திக் கொள்ளும் தளமாகப் பெற்றது. இதைப் பயன்படுத்தி 1958ல் சியாங் காய்ஷேக் ஆயுதங்களை அவ்வப்போது சீன வணிகக் கப்பல்கள் மீது வீசி, தனது உளவாளிகளை சீனாவிற்குள் நுழைக்க முயற்சித்தது. 'செல்வ வளமிக்க' தைவானை 'பட்டினியில் வாடும் சோசலிச சீன மக்கள்' வரவேற்பார்கள் என அவர் தப்புக் கணக்கு போட்டார். அமெரிக்கப் பின்புலம் கொண்ட தைவானிடமிருந்து சோசலிசத்தைக் காப்பாற்ற மாவோ பதிலடி கொடுக்க வேண்டியதாயிற்று. அமெரிக்கக் கப்பற்படை தைவானிலிருந்து வெளியேற வேண்டும் என மாவோ கோரினார். 1954ல் ஜெனிவா மாநாட்டில் ஒப்புக்கொண்டபடி சீனா அமெரிக்கா ராஜீய பேச்சுவார்த்தையை தொடர மாவோ முயற்சித்தார். 1955ல் சோவியத் ரஷ்யாவும் சீனாவிற்கு உதவியது. எனவே, ராணுவ அழுத்தத்தை எதிர்கொள்ள முடியாமல் அமெரிக்கா தனது ராணுவ நடவடிக்கைகளை குறைத்துக் கொண்டது ஆனால் தைவானை விட்டு கப்பல் படையை விலக்கிக் கொள்ள வில்லை.


சோசலிச சீனா குறித்து தனது கொள்கையை அமெரிக்கா அறிவித்தபோது, அந்நாட்டிற்கு எல்லாவகையான உதவியையும் செய்வோம் என்றது. 1970ல் கனடா உட்பட பிற மேற்கத்திய நாடுகள் சீனாவுடன் ராஜீய உறவுகளை அதிகாரப்பூர்வமாக நிறுவிக்கொண்டன. ஆனால் 1971ல் அமெரிக்கா தனது கொள்கையில் பின்வாங்கியது. ஐநா சபை உறுப்பினர் அந்தஸ்தை சோசலிச சீனாவுக்கும் (PRC) தேசிய சீனாவுக்கும் (ROC) அதாவது தைவானுக்கும் ஒருசேர வழங்கவேண்டும் என்றது. ஐநா, சோசலிச சீனாவிற்கு மட்டுமே உறுப்பினர் அந்தஸ்து வழங்கியது. 1972 ல் அமெரிக்க அதிபர் நிக்சன் சோசலிச சீனாவிற்கு சென்றபோது தைவானி லிருந்து தனது துருப்புகளை விலக்கிக் கொள்வதாக அறிவித்தார். சுருங்கச் சொன்னால், அமெரிக்காவின் அதிகாரப்பூர்வ நிலைபாடு இதுவரை பிரதான நாடான சோசலிச சீனாவை (PRC) அங்கீகரிப்பதாக இருந்தது. ஆனால் அதிகாரப்பூர்வமற்ற உறவை தைவானுடன் பாராமரித்து வருகின்றது. பிரதான நிலமான சீனாவில் தைவானும் அடக்கம் என்ற வகையில் 'ஒரே சீனம்' என்ற கொள்கையை அமெரிக்கா அங்கீகரித்து வந்த போதிலும், தைவான் உறவு சட்டம் என்ற ஒன்றை அமெரிக்க நாடாளு மன்றத்தில் இயற்றி தைவானுக்கு தனியாக ஏராளமான நிதி மற்றும் ராணுவ உதவிகளை செய்து வருகிறது. எடுத்துக்காட்டாக, ஏப்ரல் 2021ல் மட்டும் 750 மில்லியன் டாலர் ஆயுதங்களை தைவானுக்கு வழங்கியிருக்கிறது.

சீனாவைப் பொறுத்தவரையில், மாவோவின் சோசலிச சீனா, தைவானை அங்கமாகக் கொண்ட 'ஒரே சீனம்' என்ற கொள்கையை கொண்டிருந்தது. இதனை, அமெரிக்கா, ஜப்பான் உட்பட்ட ஜி7 நாடுகளும் ஏற்றுக் கொண்டன. இன்றுவரை அவற்றின் நிலைபாடு 'ஒரே சீனம்'தான். சோசலிச சீனத்தின் 'ஒரே சீனம்' கொள்கை, அனைத்து உழைக்கும் மக்களின்

தொடர்ச்சி 4ம் பக்கம்

## வ உ சிதம்பரனார் 151வது பிறந்த ஆண்டு அனுசரிப்பு




**செப்டம்பர் 05, 2022 அன்று ஏஐடிஎஸ்ஓ, ஏஐடிஓய்ஓ, ஏஐயுடியுசி இணைந்து சென்னை, தேனி, மதுரையில் வ உ சிதம்பரனாருக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது**

## தைவான் ஜலசந்தியில் . . .

# ஏகாதிபத்திய எதிர்ப்பு, போர் எதிர்ப்பு சமாதான இயக்கத்தை உலகளாவிய அளவில் மக்கள் வளர்த்தெடுத்தால் மட்டுமே போரை தடுத்து நிறுத்த முடியும்

*3ம் பக்கத் தொடர்ச்சி*

நலனை அடிப்படையாகக் கொண்டது. ஆனால், இக்கட்டுரையின் துவக்கத்தில் கூறியதுபோல, சீன கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திருத்தல்வாதி டெங் சியோபிங்கின் முதலாளித்துவக் கொள்கைகளைப் பின்பற்றி எதிர்ப்புரட்சி நடந்து இறுதியாக 2004ல் சீனா முதலாளித்துவ நாடாக மாறியபின், 'ஒரே சீனம்' என்ற கோட்பாட்டின் அடிப்படை, முதலாளித்துவ சந்தை விரிவாக்கம் மற்றும் சுரண்டல் என்பதாக மாறிவிட்டது. சீனா மிகப்பெரிய ஏகாதிபத்திய சக்தியாக மாறி உலகை அச்சுறுத்தத் துவங்கிவிட்டது. அதன் ஆக்கிரமிப்புக் கொள்கையின் அடிப்படையில் தைவானை ஆடுகளமாகப் பயன்படுத்தி, அமெரிக்காவை தடுத்து ஆதிக்கம் செலுத்த இப்பிரச்சினையைப் பயன்படுத்துகிறது. தனக்கென ஒரு சர்வதேச குழுமமாக பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென் ஆப்பிரிகா ஆகிய நாடுகள் அடங்கிய பிரிக்ஸ் (BRICS) அமைப்பை உருவாக்கிக் கொண்டு தன்னை சுற்றிய ஆசிய பசிபிக் நாடுகளின்மீது ஆதிக்கம் செலுத்த சீனா முயற்சிக்கிறது. அமெரிக்காவும் ஜப்பான், இந்தியா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளை இணைத்து 2004ல் சுனாமிக்குப் பிறகு சுனாமி எச்சரிக்கை, ராணுவ பாதுகாப்பு, பொருளாதார உதவி என்ற பெயரில் குவாட் (QUAD - Quadrilateral Security Dialogue) அமைப்பை உருவாக்கி தென்கிழக்குச் சீனப் பிராந்தியத்தில் ஆதிக்கம் செலுத்த முயற்சிக்கிறது.

எப்படி இருப்பினும், நடுநிலையோடும் தர்க்கரீதியிலும் பார்க்கும்போது சீனா நீண்டநாளாகக் கொண்டிருக்கும் 'ஒரே சீனம்' (PRC) கோட்பாடு சரியானதே. ஆனால் தைவான் ஆட்சியாளர்கள் 1949 முதற்கொண்டே, பிரதான சீன நிலப்ரப்பையும் தைவானையும் சேர்த்து தங்களுக்குக் கீழான 'ஒரே சீனம்' (ROC) என்ற நிலைப்பாட்டில் நிற்கின்றனர். இந்தப் பிரச்சினையைப் பயன்படுத்தி, தைவானை சீனா மற்றும் அமெரிக்கா ஏகாதிபத்திய நாடுகள் போர்க்களமாக்க யத்தனிக்கின்றனர். தத்தமது உள்நாட்டில் பெருகி வரும் மக்கள் பிரச்சினையை திசை திருப்பவும் பயன்படுத்த நினைக்கின்றனர்.

### தைவான் பொருளாதாரம்

அமெரிக்காவிலிருந்து ஏராளமாகப் பொருளுதவியைப் பெற்றுவரும் தைவான் ஒரு முன்னேறிய முதலாளித்துவ நாடாக உருவாகி பண்டமாற்ற வணிகப் பரிவர்த்தனையில் 786 பில்லியன் டாலருக்கு உற்பத்தி செய்துள்ளது. சென்ற வருடம், அமெரிக்காவுடன் வணிகம் செய்யும் கூட்டாளி என்ற இடத்தில் 8வது இடத்திற்கு முன்னேறியிருக்கிறது. நாம் பயன்படுத்தும் மொபைல், லேப்டாப் கணிணி வன்பொருள் மற்றும் மென்பொருள் உற்பத்தி உலக சந்தையின் பாதிக்கு மேல் என்ற அளவில் அமெரிக்காவின் ஆதரவில் தைவானில்தான் நடைபெறுகிறது. தைவான் செமி கன்டக்டர் உற்பத்தி நிறுவனம் (TSMC) உலகச் சந்தையில் ஆதிக்கம் செலுத்துகிறது. ஆனால் மேலை நாடுகளுக்கு தைவான் ஏற்றுமதி செய்து ஈட்டும் அந்நியச் செலாவனியைவிட இரு மடங்கு சீனாவிற்கு ஏற்றுமதி செய்வதால்தான் தைவான் பெறுகிறது. மேலும் தனக்கு வேண்டிய கனரக இயந்திரங்கள் மின் உற்பத்தி இயந்திரங்களை சீனாவிடமிருந்து தைவான் பெறுகிறது. எனவே, சீனாவுடனான உறவும் தைவானுக்கு முக்கியமாகும். அமெரிக்காவின் பேச்சைக் கேட்டு சீனாவுடன் முரண்பட்டால் தைவானுக்கு அதிக நஷ்டமாகிவிடும். மேலும், தைவான் ஜலசந்தி நீர்வழியை பாதிக்கும் வகையில் அங்கு போர் மூளுமானால் அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் கூட கம்ப்யூட்டர் சிப் மற்றும் மின் பாகங்கள் ஏற்றுமதி பாதிக்கப்பட்டுவிடும்.

### இந்தியாவின் நிலைப்பாடு

தைவானுடன் இதுவரை இந்தியா எந்த ராஜீய உறவையும் கொண்டிருக்கவில்லை. சீனாவின் 'ஒரே சீனம்' கொள்கையை இந்தியாவும் ஆதரித்து வந்தது. ஆனால் 1995ல் இந்திய-தைபெய் அசோசியேசன் (ITA) ஒன்றை அமைத்து அதன் அலுவலகத்தை தைவான் தலைநகர் தைபெய்யில் திறந்துள்ளது. புதுடெல்லியில் தைபெய் எகனாமிக் அன்ட் கல்சுரல் சென்டர் (TECC) ஒன்றை தைவான் திறந்துள்ளது. தற்போது சீனாவுடன் தனது உறவு வலுப்பெறவில்லை என்பதால் இந்தியா அமெரிக்கா பக்கம் சாய்து வருகிறது. ஆக, சீனாவின் பக்கமும் தைவானின் பக்கமும் ஒரேசமயத்தில் இந்தியா சாய்ந்து நிற்கின்றது! சமீபகாலமாக இந்திய ஏகாதிபத்தியவாதிகள் அமெரிக்காவின் பக்கம் அதாவது தைவானின் பக்கம் அதிகமாக சாய்ந்து வருகின்றனர். ஆசியாவில் மட்டுமின்றி உலகத்திலேயே ஏகாதிபத்திய சூப்பர் பவர்களில் ஒருவனாக வர இந்தியா அமெரிக்காவின் உதவியை தொடர்ந்து நாடுகிறது. அமெரிக்காவில் இருக்கும் இந்தியத் தூதரை தைவானுக்கும் தூதுவராக இந்தியா நியமித்திருக்கிறது. தைவானின் புதிய அதிபர் பதவியேற்பு ஆன்லைன் விழாவில் இரண்டு எம்பிக்களை இந்தியா கலந்து கொள்ள வைத்தது. ஆயினும் இதுவரை அரசியல் நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் விதத்தில் இந்தியா தைவானை ஆதரித்து அதிகாரப்பூர்வமாக அறிக்கை எதுவும் வெளியிடவில்லை.

### தற்போதைய போர் பதற்றம் தூண்டப்பட என்ன காரணம்

25 ஆண்டுகள் கழித்து, அமெரிக்க அதிபருக் கடுத்து மூன்றாவது நிலையில் இருக்கும் மிக உயர்ந்த அமெரிக்க அதிகாரி, வெளியுறவுச் செயலாளர் நான்சி பெலோசி தைவானுக்குச் சென்றதுதான் இந்தப் பதற்றத்தின் தூண்டலுக்குக் காரணமாகும். ஏனென்றால், அவர் செல்லப் போகிறார் என்ற அறிவிப்பு வந்தவுடன் சீன அதிபர் சி ஜின்பிங் அவரை அனுப்ப வேண்டாம் எனவும் அது தேவையில்லாமல் பதற்ற நிலையை தூண்டிவிடும் எனவும் அமெரிக்க அதிபர் ஜோ பைடனை கேட்டுக் கொண்டார். ஆனால் அமெரிக்க அதிபர் அதை புறக்கணித்து நான்சி பெலோசியை அனுப்பினார். இது இயற்கையாகவே சீனாவைத் தூண்டிவிட்டது. சீன ஏகாதிபத்தியம், தைவானை அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் செல்வாக்கில் வைத்திருக்க விரும்பவில்லை. 'ஒரே சீனம்' என்ற தனது நிலைப்பாட்டில் அமெரிக்கா குறிக்கிடுவதை சீனா எதிர்க்கிறது. ஆனால் மேற்கு உலக ஏகாதிபத்திய ஊடகங்களும் இந்திய ஊடகங்களும் ஏதோ சீனா மட்டுமே ராணுவத்தை முடுக்கிவிட்டு போர்ப் பயிற்சிகளை நடத்துவது போல ஒருசார்பு செய்தியையே காட்டிக்கொண்டிருக்கின்றன. ஆனால் அமெரிக்காவின் ஏழாவது கடற்படைப் பிரிவு இந்த வருடத்தில் மட்டுமே மாதத்திற்கு ஒன்று என ஏவுகணையைத் துரத்தித் தாக்கி அழிக்கும் வசதிபடைத்த நவீன கப்பல்களை அங்கு அனுப்பியுள்ளது. அமெரிக்காவின் பசிபிக் எதிரிகளைத் தாக்கியழிக்கும் பயிற்சித் திட்ட கப்பற்படையை அனுப்பி 170 விமானங்களையும் 38 போர்க்கப்பல்களையும் 4 நீர்மூழ்கிக் கப்பல்களையும், 25,000 ராணுவவீரர்களையும் ஜி7 நாடுகளிலிருந்து திரட்டி அங்கு சுற்றிக்கொண்டிருக்கிறது.

### பொருளாதாரத்தை ராணுவமயப் படுத்துவதும் போர்களும் ஏகாதிபத்திய நாடுகளின் தவிர்க்க முடியாத நடவடிக்கைகளாகும்

முதலாளித்துவ பொருளாதார உற்பத்தியின் கூலிவிலை இலாபம் என்ற விதியின் விளைவாக, விலைவாசி ஏற்றம், வேலையின்மை, ஆலைமூடல், இலட்சக்கணக்கில் பணிநீக்கம் ஆகியவை தொடர்ந்து அதிகரித்து பொருளாதார நெருக்கடியை மேன்மேலும் தீவிரமாக்குகிறது. இதனால் நுகர்பொருள் சந்தை தொடர்ந்து சுருங்குகிறது. ஆனால் மக்களைக் கசக்கிப் பிழிந்து வரிப்பணத்தால் கஜானாவக் நிரப்பி, அதைவைத்து ராணுவத்தளவாடங்களை வாங்க செயற்கையாக ஒரு சந்தையை முதலாளித்துவ அரசுகள் உருவாக்குகின்றன. ஏகபோக முதலாளிகள் ராணுவத் தளவாட உற்பத்தியில் இறங்குகின்றனர். இதன்மூலம் செயற்கையாக நெருக்கடியில் செத்து மடியும் நிலையில் இருக்கும் முதலாளித்துவப் பொருளதாரத்திற்கு சுவாசம் பொருத்தப்பட்டு சில நாட்கள் முதலாளித்துவ அமைப்பை நீட்டிக்க முயற்சிக்கின்றனர். தளவாடங்களை மக்கள் வரிப்பணத்தில் வாங்குவதை நியாயப்படுத்த போர் பதற்றத்தையும் அவ்வப்போது வலிமை குன்றிய நாடுகளின் மீது போர்களையும் ஏகாதிபத்தியவாதிகள் தொடுக்கின்றனர். இவ்வாறுதான் சமீபத்தில் ஈராக் போர், ஆப்கானிஸ்தானத்தில் ஜனநாயகத்தை நிலைநாட்டுகிறோம் என்றபெயரில் போர், உக்ரைன் நாட்டில் அமெரிக்க ரஷ்யா ஏகாதிபத்தியவாதிகள் போர் என இடைவிடாது போர்களை நடத்திய வண்ணம் இருக்கின்றனர். இறுதியாக தைவானை மையமாக வைத்து போருக்கான தயாரிப்புகளை சீனாவும் அமெரிக்காவும் செய்து வருகின்றன.

1990லேயே தைவான் ஜலசந்தியில் சீன கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திருத்தல்வாதி டெங்சியோபிங் போர்ப் பயிற்சிகளை நடத்தினார். பதிலுக்கு அமெரிக்க அதிபர் பில் கிளின்டன், விமானம் தாங்கிக் கப்பல்களை அப்பகுதிக்கு அனுப்பிவைத்தார். இப்போதைய அதிபர் ஜோ பைடன், கிளின்டனைப் போல் அல்லாமல் எந்த அதிகாரப்பூர்வமான அறிக்கையையும் விடவில்லை. ஆனால் சீனா தாக்கினால், தைவானைப் பாதுகாக்க வருவோம் என அமெரிக்க தலைமை வாக்குறுதி வழங்கியிருந்தது. உலகமுழுவதும் 85 நாடுகளில் அமெரிக்க ஏகாதிபத்தியம் 750 ராணுவ மையங்களையும் 8 நாடுகளில் கடற்படைத் தளங்களையும் அமைத்துள்ளது. சீன ஏகாதிபத்தியமும் ஆப்பிரிகா கடற்கரை டிபவுதியில் 2017ல் முதல் கடற்படைத் தளத்தை அமைத்தது. மத்தியரேகையில் அமைந்திருக்கும் நாடான குனியாவில் ராணுவத்தளத்தை அமைக்கத் திட்டமிட்டிருக்கிறது. இலங்கையின் அம்பன்தொடா துறைமுகத்தை 99 வருடத்திற்கு குத்தகை (லீஸ்) எடுத்து தனதாக்கிக் கொண்டு கப்பற்படையை கொண்டுவந்து நிறுத்தி உளவு பார்த்த செய்தியையும் நாம் அறிவோம். உலக சூபர் பவர் ஆக வேண்டுமானால் பிராந்திய வல்லரசு என்ற அந்தஸ்தை முதலில் நிலைநாட்ட வேண்டும். எனவே பூகோள ரீதியாக, தைவானின் மீது ராணுவ ஆதிக்கம் செலுத்துவது சீனா முதலாளித்துவ ஏகாதிபத்திய நாட்டிற்கு தேவையாக இருக்கிறது. ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையே தீவிரமாகும் முரண்பாடு போருக்குக் காரணமாகிறது என மாபெரும் தலைவர் லெனின் முன்பே எடுத்துரைத்தபடி தற்போது உக்ரைன் மற்றும் தைவான் சம்பவங்கள் உலகை பேரழிவுப் போர் பாதையில் இழுத்துவிடும் அபாயத்தை வெளிப்படுத்தி அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன.

ஏகாதிபத்திய நாடுகள் தங்களின் ஆளும் ஏகபோக முதலாளித்துவ கார்ப்பொரேட் நிறுவனங்களின் சந்தைப் பசியைத் தீர்க்க, அவர்களின் குறுகிய நலன்களுக்காக ஏதோ சாக்குப் போக்கு சொல்லி இங்கும் அங்கும் போரை நடத்திக்கொண்டிருப்பதை உலகின் ஜனநாயக எண்ணம் கொண்ட அமைதியை விரும்பும் மக்கள் பார்த்து வெறுப்புற்றிருக்கின்றனர். உக்ரைன் போரையும் புதிதாக அச்சுறுத்தும் தைவான் போரையும் நிறுத்த உண்மையிலேயே ஏதாவது நடவடிக்கையை எடுக்க வேண்டும் என விரும்புகின்றனர். ஆனால் வெறும் விருப்பமே அமைதியை கொண்டுவந்துவிடாது. முன் காலத்தில் உலக அமைத்திக்குப் பாதுகாவலனாக விளங்கிய ரஷ்யா மற்றும் சீனா சோசலிச நாடுகள் எதிர்ப்புரட்சியின் மூலம் அமெரிக்காவைப் போலவே ஏகாதிபத்திய நாடுகளாக மாறிவிட்ட பிறகு, இனி உலகில் எந்த நாடும் சமாதானத்தை ராணுவ ரீதியில்

தொடர்ச்சி 6ம் பக்கம்

# சென்னை பரந்தூரில் 2வது விமான நிலையம்
# மக்களின் கேள்விகளுக்கு அரசாங்கம் பதிலளிக்க வேண்டும்

சென்னைக்கு இரண்டாவதாக மற்றொரு விமான நிலையம் அத்தியாவசியத் தேவை எனக் கூறி 13 கிராமங்களை உள்ளடக்கிய பரந்தூரில் மக்கள் வசிக்கும் விவசாய நிலப் பகுதியை கையகப்படுத்த தீவிர முயற்சியை திமுக அரசாங்கம் எடுத்து வருகின்றது. புதிய தொழிற்சாலை, நெடுஞ்சாலை, பஸ் நிலையங்கள், புதிய விமான நிலையங்கள் போன்ற திட்டங்களை விவசாய விளைநிலங்கள், நீர்நிலைகள், மக்களின் வசிப்பிடங்கள் பாதிக்காதவாறு செயல்படுத்த வேண்டுமென்பதில் எவருக்கும் மாற்றுக் கருத்து இருக்கமுடியாது. 2வது விமான நிலையத்தின் தேவைக்கு அரசாங்கம் கூறும் காரணங்களாவன:

வரும் 2028ல் சென்னை விமான நிலையம் அதன் அதிகபட்ச அளவான ஆண்டுக்கு 3.5 கோடி பயணிகள் என்ற எண்ணிக்கையை எட்டும் (தற்போது மீனம்பாக்கம் விமான நிலையத்தில் ஆண்டுக்கு 2.25 கோடி பயணிகள் பயணிக்கின்றனர்). ஆகவே, சென்னை பெருநகரம், காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்கள் மட்டுமின்றி, தென்னிந்திய மாநிலங்களின் வளர்ந்துவரும் வணிகம், வர்த்தகம், தொழில்கள், சுற்றுலா, விமான பயணிகள், சரக்கு போக்குவரத்து தேவைகளை பூர்த்தி செய்வதற்கு சென்னைக்கு அருகில் ஒரு புதிய விமான நிலையம் அமைப்பது இன்றியமையாதது. தமிழகத்திற்குள்ளும் இந்தியாவின் முக்கிய நகரங்களை சென்னையுடன் இணைப்பதற்கும், உலக வளர்ச்சியுடன் இணைந்து செயல்படுவதற்கும், புதிய விமான நிலையத்தின் பங்கு மிகவும் முக்கியமானது. இவையே இரண்டாவது விமான நிலையத்தின் தேவை குறித்து அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள காரணங்களாகும்.

மீனம்பாக்கத்தில் ஏற்கெனவே உள்ள 3 விமான நிலைய முனையங்கள், தற்போது கட்டப்பட்டு வரும் 4வது முனையம் ஆகியவை இணையாக அமைந்துள்ளதால், முனையங்களுக்கு அருகே விமானங்கள் நிறுத்தும் இடத்தை அமைப்பது கடினம். மேலும் விமான நிலையத்தின் பகுதிகளில், ஏராளமான குடியிருப்புகள், கட்டிடங்கள் நிறைந்து இருப்பதாலும், நிலத்தின் மதிப்பு மிக அதிக அளவில் இருப்பதாலும், விமான நிலைய விரிவாக்கத்திற்கு தேவையான நிலத்தை கையகப்படுத்துவது கடினம். ஆகவே, சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளில் நான்கை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர், படாளம், காஞ்சிபுரம் மாவட்டம் பரந்தூர், திருவள்ளூர் மாவட்டம் பன்னூர் ஆகும். அதில், பரந்தூர் மற்றும் பன்னூர் இறுதி செய்யப்பட்டு, அந்த இரண்டு இடங்களிலும் அடுத்தகட்ட சாத்தியக் கூறுகள் ஆய்வு செய்யப்பட்டன. விளை நிலங்கள், தொழிற்சாலைகள், மக்கள் வசிக்கும் பகுதிகள், நிலத்தை கையகப்படுத்த ஆகும் செலவுகள் என பல்வேறு அம்சங்களை ஆராய்ந்து, இறுதியாக, புதிய இரண்டாவது பசுமை விமான நிலையம் அமைக்க எல்லா வகையிலும் ஏற்ற இடம் பரந்தூர் என்று முடிவு செய்யப்பட்டதாக அரசாங்கம் கூறியுள்ளது.

### மக்களின் கேள்விகள்

இரண்டாவது விமான நிலையம் மக்களின் அடிப்படைத் தேவையா என்பது சாமானிய மக்களின் முதல் கேள்வியாகும். அப்படியே இருந்தாலும் விமான நிலையம் அமைக்க நிலம் கையகப்படுத்தும் பொழுது, முக்கியமான அம்சங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்று தோன்றுகிறது. இயற்கை வளங்களை பாதுகாத்தும், சுற்றுச்சூழல் பாதிக்கப்படாமலும் மனிதனின் வாழ்வாதாரம் அழிக்கப்படாமலும் இருப்பதை உறுதி செய்து கொள்ளல் வேண்டும். இவை கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளதா என்பது மக்களின் மற்றொரு கேள்வியாகும்.

முதலாவதாக, புதிய விமான நிலையம் அமைக்கப்படும் பகுதியில் இயற்கை வளம் பாதுகாக்கப்பட எந்த அளவிற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது? இரண்டாவதாக, பரந்தூர் நீர்ப்பிடிப்பு அதிகம் உள்ள இடம் ஆகும் என்பதை அரசே ஏற்றுக் கொண்டுள்ளது. குறிப்பாக, திரு நித்யானந்த் ஜெயராமன் (சுற்றுப்புற சூழலியலாளர், ஆகஸ்ட் 18, 2022) தமிழ் இந்து பத்திரிகையில் "நீருக்குள் ஒரு விமான நிலையம்?" என்ற தனது கட்டுரையில் பரந்தூர், மழை நீர்ப்பிடிப்பு பகுதியாகும் என விரிவாக விளக்கியுள்ளார். மூன்றாவதாக, அங்கே வாழும் ஆயிரக்கணக்கான குடும்பங்களின் வாழ்வாதாரம் குறித்ததாகும்.

### அரசாங்கத்தின் வாக்குறுதியும் மக்களின் அச்சமும்

இரண்டாவது விமான நிலையத்திற்கு கையகப்படுத்தப்படும் பரந்தூர் பகுதியானது பசுமை நிறைந்த விவசாய நிலம் ஆகும். அமைச்சர்கள் திரு எ வ வேலு (பொதுப்பணித் துறை), திரு தங்கம் தென்னரசு (தொழில் துறை), திரு தா மோ அன்பரசன் (சிறு, குறு, நடுத்தர தொழில்கள் துறை) ஆகியோர் ஆகஸ்டு 26, அன்று செய்தியாளர்கள் சந்திப்பில்: பரந்தூர் மக்கள் கேட்டதன் அடிப்படையில், நிலத்துக்கு சந்தை மதிப்பில் 3.5 மடங்கு அதிக தொகை கொடுக்க அரசு முடிவெடுத்துள்ளது. விமான நிலையம் அமையும் இடத்திற்கு சுற்றுவட்டாரத்தில் இடம் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு இடமும், வீடு கட்ட பணமும் தர உள்ளதாகவும், அம்மக்களுக்கு தகுதி அடிப்படையில் படித்தவர்களுக்கு அரசு சார்பில் வேலை வழங்கப்படும் என்றும் கூறியுள்ளனர். ஆனால், அம்மக்கள் அரசின் வாக்குறுதிகளை ஏற்க மறுப்பதோடு இத்திட்டத்தை எதிர்த்தும் வருகின்றனர்.

இரண்டாவது விமான நிலையத்திற்கு கையகப்படுத்தப்படும் நிலப்பரப்பு மொத்தம் 4563.56 ஏக்கர் ஆகும் (இவ்வளவு நிலப்பரப்பு எதற்காக என்பதை முன்வைக்க வேண்டும். மீனம்பாக்கம் விமான நிலையத்தின் நிலப்பரப்பு 1,350 ஏக்கருக்கும் குறைவானதே). இதில் 3,246.38 ஏக்கர் நிலம் தனியார் பட்டா நிலங்களாகும்.1,317.18 ஏக்கர் அரசு மற்றும் புறம்போக்கு நிலம் ஆகும். தனியார் பட்டா நிலத்தில் 2,446.79 ஏக்கர் நன்செய் 799.59 ஏக்கர் புன்செய் நிலம் ஆகும். ஆக, 3,246 ஏக்கர் நிலம் மக்கள் விவசாயம் செய்யும் நிலமாகும். ஆகையால் பிரதானமாக அம் மக்களின் வாழ்வாதாரமே விவசாயமாக உள்ளது. பல ஆண்டு காலமாக கடுமையான உழைப்பை செலுத்தி விவசாயத் தொழிலை நடத்தி தங்களது வாழ்வாதாரத்தை உருவாக்கியுள்ளார்கள். ஆக, அரசு கொடுக்கும் நட்ட ஈட்டுத் தொகை வரக்கூடிய நாட்களில் தொடர்ச்சியான பண மதிப்பின் வீழ்ச்சி காரணமாக, தங்களது வாழ்வாதாரத்தை தக்க வைத்துக் கொள்ள முடியாது என்பது அம் மக்களுக்கு தெரியும்.

### நிபுணர்கள் எழுப்பும் நியாயமான கேள்விகள்

அடுத்ததாக, பரந்தூர் பகுதியானது நீர்நிலைகள், நீர்ப்பிடிப்பு அதிகமுள்ள பகுதி தான் என்பதை அமைச்சரே ஒப்புக்கொண்டுள்ளார். திரு நித்யானந்த் ஜெயராமன் எழுப்பும் கேள்வி என்பது 4,500 ஏக்கர் நிலம் கட்டுமானங்களால் மூடப்படும் பொழுது அப்பரப்பில் பெய்யும் மழையின் நீர் முழுமையாக வெளியேற்றப்படும். மழைநீர் சென்னைக்குள் நுழையும். 2015இல் செம்பரம்பாக்கத்தில் இருந்து வெளியேறிய நீரின் அளவில் பாதியளவு நீர் வந்தால்கூட சென்னையில் பாதிப்பு அதிகமாக இருக்கும் என்று கூறுகிறார். அதற்கு அமைச்சர் தனது செய்தியாளர் சந்திப்பின்போது, தற்போதைய தொழில்நுட்பத் திறன் மூலமாக நீர்நிலைகள் பரந்தூரில் முழுமையாகப் பாதுகாக்கப்படும் என்று கூறியுள்ளார். ஆனால், திரு நித்யானந்த் ஜெயராமன் மேலும் கூறுகையில், நவீன பொறியியல் தீர்வு என்பது திறன் மிகுந்த மழைநீர் வடிகால் கட்டமைப்பையும், மழை நீர் சேமிப்பு கட்டமைப்புகளையும் திட்டப் பகுதியில் கட்டுவதாகும். ஆனால், மனிதர்களால் கட்டப்படும் அற்பமான மழைநீர் வடிகால்கள் இயற்கையாக உருவான மழைநீர் சேமிப்பு பகுதிகளான சதுப்பு நிலத்திற்கு இணையானவை ஆகாது என்பதாகும்.

### இரண்டாவது விமான நிலையம் மக்களின் நலன்!

மேலும், ஒரு திட்டத்தை அமல்படுத்தும் போது, எந்த இடத்தில் அத்திட்டம் அமல்படுத்தப்படுகிறதோ அவ்விடத்தில் வாழும் மக்களின் நலன் முழுமையாக கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். குறிப்பாக விவசாயம், இயற்கையின் சூழல் மற்றும் மக்களின் வாழும் இடம் ஆகியவற்றை கையகப்படுத்தும் பொழுது, அரசின் திட்டம் பிரதானமாக சமுதாயத்தின் நன்மையை கொண்டுள்ளது என்பதை உறுதி செய்ய வேண்டும். அது உறுதி செய்யப்பட்ட பின்பு அப்பகுதியிலிருந்து அப்புறப்படுத்தப்படும் மக்களுக்கு அதுவரை தங்களது வாழ்வாதாரமாக கொண்டிருந்த அல்லது பெற்றுவந்த பயனை முதலில் உறுதி செய்ய வேண்டும்.

அமைச்சர் பத்திரிகையாளர் சந்திப்பில் கூறும்போது; ரூபாய் 100 செலவு செய்யும்போது ரூபாய் 325 திரும்ப வருகிறது என்றும் இந்த புதிய விமான நிலையம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றம் அடையச் செய்யும் என்றும், அதாவது, இத்திட்டத்தால் ஆயிரக்கணக்கானோர் நேரடியாகவும், மறைமுகமாகவும் பயன் பெறுவர் என்று கூறியுள்ளார். இன்றைய நிலை என்ன? பரந்தூர் பகுதியின் விவசாயம் மற்றும் விவசாயத்திற்கு தேவையான உப பொருட்கள் உற்பத்தி, விற்பனை மூலமாக பல்லாயிரக் கணக்கான மக்கள் உயிர் வாழ்ந்து கொண்டுள்ளார்கள் என்பதுதான் உண்மை. கால்நடைகள், பறவைகள், இன்னும் பல உயிரினங்களும் மனிதனின் இயற்கை வளத்தை பாதுகாத்து சுற்றுச்சூழல் சமநிலையை பாதுகாத்து வருகின்றன. ஆகையால், இரண்டாவது விமான நிலையம் அமைப்பதன் மூலம் உருவாக்கப்படும் வேலைவாய்ப்பு வருவாயை விட தற்போதுள்ள விவசாயம், கால்நடை வளர்ப்பு, நீர்நிலை பிடிப்பு அதை ஒட்டி வாழும் உயிரினங்கள் போன்ற வற்றினால் கிடைக்கும் பயனே அதிகமானது.

### எது வளர்ச்சித் திட்டம்?

இரண்டாவது விமான நிலையம் அமைப்பதன் நோக்கத்தை விளக்கும்போது மிகப்பெரிய வளர்ச்சித் திட்டமாக காண்பிக்கப்படுகிறது. உண்மையிலேயே மக்களின் இன்றைய தேவை என்ன? மக்களின் அடிப்படைத் தேவைகளான உணவு, சுகாதாரம், கல்வி அனைத்தும் பூர்த்தி செய்யப்பட வேண்டும். விவசாயம், தொழில் உற்பத்தி அதிகப்படுத்தப்பட வேண்டும். அதற்குத் தேவையான மின் உற்பத்தி வேண்டும். உற்பத்தி செய்யப்படும் விவசாய பொருட்களுக்கு உரிய விலை கிடைக்க வேண்டும். பல தொழிற்சாலைகள் மூடப்பட்டு வருகின்றன. வேலையில்லாதோர் பட்டாளம் அதிகமாகிக் கொண்டு வருகிறது. இதற்கெல்லாம் தீர்வு காண எந்த ஒரு திட்டத்தையும் வடிவமைக்காமல் குறிப்பாக கரோனா வைரஸ் பெருந்தொற்றின் பாதிப்பிலிருந்து சிறிது வெளிவந்து கொண்டிருக்கும் மக்களுக்கு வாழ்வாதாரத்திற்கான ஒரு

தொடர்ச்சி 6ம் பக்கம்

### மத்திய அரசாங்கத்தின் உணவுப் பொருட்கள் மீதான ஜிஎஸ்டி வரியை திரும்பப்பெறக் கோரி புதுச்சேரி மாநிலத்தில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) ஆர்ப்பாட்டம்



## சென்னை பரந்தூரில் 2வது விமான நிலையம்

# நீர்நிலை, விவசாயம், போலீஸ் அடக்குமுறை – திமுக அரசாங்கத்திடம் சில கேள்விகள்

*5ம் பக்கத் தொடர்ச்சி*

*சரியான திட்டத்தையும் வகுக்காமல் இரண்டாவது விமான நிலையம் கட்டுவதால் ஆயிரக்கணக்கானோர் நேரடியாகவும், மறை முகமாகவும் பயனடைவர் என்றும் கூறி வளர்ச்சித் திட்டமாக காட்டுவது மிகப்பெரும் ஏமாற்றுத்தனம் அல்லவா?*

மேலும், வர்க்கப் பிளவுகொண்ட நமது நாட்டில், 'மக்கள் நலனுக்காக' என்று ஒரு அரசாங்கம் போடும் எந்தத் திட்டமும், ஆளும் ஏகபோக முதலாளிகளின் நலனுக்காகவே இருக்கின்றது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

அதிமுக அரசாங்கத்தால் சென்னை சேலம் இடையே 8 வழி பசுமைச் சாலை அமைக்கும் திட்டத்தை விவசாயிகள் எதிர்த்த பொழுது போராடும் விவசாயிகளோடு நிற்பதாக எதிர்க்கட்சியாக இருந்த திமுக கூறியது. விவசாயிகளுடைய அனுமதி இல்லாமல் நிலம் கையகப்படுத்துவதை எதிர்ப்பதாகவும், 8 வழி பசுமை சாலை தேவையில்லாத ஒன்று என்றும், போராடும் விவசாயிகளை போலீசைக் கொண்டு அடக்குமுறை செய்வதாகக் கூறி கண்டனம் செய்த திமுக இன்று 2வது பசுமை விமான நிலையம் அமைக்க பசுமை பகுதிகளை கையகப்படுத்த விவசாயிகளை கட்டாயப்படுத்துவதோடு பரந்தூர் பகுதியைச் சுற்றி போலீஸ் படையை குவிப்பது அதிமுக அரசாங்கத்தின் அதே அடக்குமுறை செயல் அல்லவா? அப்பகுதி விவசாயிகளிடம் கருத்தை கேட்பதற்கு செல்வோரை கூட போலீஸ் தடுத்து நிறுத்துகிறது. இது என்ன ஜனநாயக நடைமுறை?

சென்னையில் பல்வேறு பகுதிகளில் குறிப்பாக, கொளத்தூர் அவ்வை நகர், கிரீன்வேஸ் சாலை ஆர் ஏ புரம் இளங்கோ தெரு, ஈஞ்சம்பாக்கம் பெத்தேல் நகர் பகுதிகளில் 60 ஆண்டுகளுக்கும் மேலாக குடியிருக்கும் மக்களை அப்புறப்படுத்துவதற்காக, அப்பகுதி நீர்நிலை பிடிப்பு, நீர் செல்லும் வழி, மேய்க்கால் இடம், ஈரநிலம் என்றும் இங்கு பட்டா வழங்கவில்லை என்று கூறியும் அம்மக்களின் குடியிருப்புகளை இடிப்பது ஒரு தொடர் கதையாக உள்ளது. நீதிமன்றமும் நீர்நிலைகளைப் பாதுகாப்பது முக்கியம் என்று கூறி குடியிருப்புகளை அகற்ற உத்தரவிடுகிறது. நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது என்று கூறிக்கொண்டு ஏழை மக்கள் குடியிருக்கும் வீடுகளை இடிப்பதில் நமது அரசாங்கங்கள் எந்த ஒரு தாமதமும் செய்வதில்லை. அதைப் போன்றே, இங்கும் நீதிமன்றம் நீர்நிலை பிடிப்புகளும், அதிக விவசாயமும் கொண்ட பரந்தூர் பகுதியை வளர்ச்சித் திட்டம் என்ற பெயரில் கையகப் படுத்துவது குறித்து எந்த கேள்வியும் கேட்கவில்லை. மேலே கூறிய பகுதிகளில் வாழும் மக்கள், கிராமங்களில் வாழ இயலாத சூழலில் வேலை தேடி நகரத்தை நோக்கி இடம்பெயர்ந்த ஏழை எளிய மக்களாவர். இப்பகுதி மக்கள் பிரதானமாக இன்றுவரை தினக்கூலி, குறைந்த சம்பளம், கட்டிடத் தொழில் மற்றும் இதுபோன்ற வேலைகளில் ஈடுபடுவோர் அதில் கிடைக்கும் வருமானத்தை கொண்டு தங்களது வாழ்க்கையை நடத்தி சிறுகச் சிறுக பணம் சேர்த்து ஒரு சிறிய வீட்டைக் கட்டி வாழ்ந்துவரும் அம்மக்களை நீர்நிலை ஆக்கிரமிப்பு என்று கூறி அவர்களது வீட்டை இடித்து தெருவிலே தூக்கி எறிந்துவிட்டு, மறுபுறத்தில் பசுமை விமான நிலையம் கட்டுவதற்கு நீர்நிலையை அழிப்பது முரண்பாடு இல்லையா? நியாயமற்ற செயல் இல்லையா? திரு அமைச்சர், இரண்டாவது விமான நிலையம் பற்றிய திட்டத்தை விளக்கும்போது அதிநவீன தொழில்நுட்பத்துடன் நீர்நிலைகள் பாதுகாக்கப்படும் என்ற வாதத்தை முன்வைக்கிறார். அரசு கூறும் வாதம் அறிவியல் பூர்வமானதென்றால் அதே அடிப்படையில் சென்னையின் நீர்நிலைகளை பாதுகாக்க முடியுமே! உண்மையில் நீர்நிலைகளைப் பாதுகாக்க இன்றுவரை எந்தவொரு மத்திய, மாநில அரசாங்கங்களும் அறிவியல்பூர்வமான மற்றும் அரசியல் விருப்புறுதியுடன் செயல்படவில்லை. உண்மை என்னவென்றால், ஏகபோகங்கள் மற்றும் பணக்காரர்களின் நலன், பயன்கள் மட்டுமே முதன்மையானதாகவும், பிரதானமாகவும் கணக்கில் கொள்ளப்படுகிறது. அதே போல் தான் பரந்தூர் இரண்டாவது பசுமை விமான நிலையத்தின் நோக்கமும் ஆகும். ஏழைகளின் கண்ணீருக்கு இங்கு மதிப்பில்லை என்பதை ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த உடன் திமுகவும் உணர்த்தியுள்ளது.

### மக்களின் கருத்தும் உரிமையும்

இறுதியாக, திமுக அரசாங்கத்திடம் நாம் முன்வைக்கும் கருத்து இதுதான்; எந்தவொரு திட்டத்தையும் மக்களின் தேவைக்காக என்று கூறும்பொழுது அங்கே வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை முதலில் உறுதி செய்ய வேண்டும். அடுத்ததாக சுற்றுச்சூழல் மற்றும் இயற்கையின் சமநிலையை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். இவை யாவற்றையும் முழுமையாக பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்ததற்கு பின்பாகத்தான் எந்த ஒரு திட்டத்தையும் அமல்படுத்த வேண்டும். எனவே, மக்கள் கருத்துக்கு அரசாங்கம் சிறிதளவு சந்தேகத்திற்கும் இடமின்றி விளக்கம் அளிக்க வேண்டும். அதுவரை தங்களது வாழ்வுரிமைக்காக போராடுவது ஜனநாயகத்தையும், நியாயத்தையும் நேசிக்கும் ஒவ்வொரு மனிதனின் உரிமை ஆகும். எனவே, பரந்தூர் மக்களின் உரிமைக்காக ஜனநாயக எண்ணம் கொண்ட அனைத்து மக்களும் தொடர்ந்து குரல் கொடுக்க முன்வர வேண்டும் ■

## தோழர் சிப்தாஸ் கோஷ் பிறந்த நூற்றாண்டு . . .

# சோசலிசப் புரட்சியின் வெற்றிக்கு தோழர் சிப்தாஸ் கோஷ் சிந்தனையின் அவசியம்!

*2ம் பக்கத் தொடர்ச்சி*

தலைமையை குருட்டுத்தனமாகப் பின்பற்றும் போக்கு இயந்திரத்தனமாக வளர்ந்துவிடும். சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் இதுதான் ஸ்டாலின், மாவோவின் மறைவுக்குப் பின் நடந்தது. இதை, 'கம்யூனிச முகாமிற்குள் சுயவிமர்சனம்' என்ற படைப்பில் தோழர் கோஷ் விளக்குகிறார்.

இன்றையதினம் உலக அரங்கில் கம்யூனிச முகாம் வீழ்ந்து விட்டது. சோவியத் ரஷ்யா, செஞ்சீனம் ஆகியவை முதலாளித்துவ ஏகாதிபத்திய நாடுகளாக மாறி, அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு போட்டியாக உருவாகி விட்டன. போருக்கான அபாயம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. போருக்கு ஆதரவாக மக்களிடையே தேசிய வெறியுணர்வுகள் தூண்டப்படுகின்றன. நமது நாட்டிலும் ஏகபோக கார்ப்பொரேட் முதலாளிகளின் நலனுக்காகப் போடப்படும் திட்டங்களையும் கொள்கைகளையும் எதிர்த்து மக்கள் போராட்டத்தில் குதிக்காமல் இருக்க, மக்கள் ஒற்றுமையைக் குலைக்கும் அனைத்து ஃபாசிச நடவடிக்கைகளையும் ஆளும் முதலாளித்துவ வர்க்கம் எடுக்கின்றது. மதவெறி, தேசிய வெறியை தூண்டுகிறது. முன்பு காங்கிரஸ் கட்சி மூலம் முதலாளித்துவ வர்க்கம் இவற்றைச் செய்தது; இன்று பாஜக மூலம் முழுமையான ஃபாசிசத்தைக் கொண்டுவர முயற்சிக்கிறது. நிர்வாகத்திலும் நீதித்துறையிலும் ஃபாசிசப் போக்குகளை வெளிப்படையாகக் காணமுடிகிறது.

மிகவும் அபாயகரமான சூழல் நாட்டில் நிலவுகிறது. குஜராத் கலவரத்தில் கொடூரமாகப் பாதிக்கப்பட்ட பெண்மணி பில்கிஸ் பானு வழக்கில் கைதாகி ஆயுள் தண்டனை பெற்ற 11 கைதிகள் நன்னடத்தை சான்றுடன் விடுவிக்கப் பட்டுள்ளனர். அவர்களை மாலை மரியாதையுடன் பாஜகவினர் வரவேற்றிருக்கிறார்கள். குஜராத் கலவரத்தில் போலியாகக் கைதுசெய்யப்பட்ட பலரை வாதாடி விடுவித்த சமூக செயல் பாட்டாளர் தீஸ்தா செதால்வத், மோடி மீது வழக்கு பதிவு செய்ய வேண்டும் என்று கருத்து தெரிவித்ததற்காக சமீபத்தில் கைது செய்யப்பட்டு துன்புறுத்தப்படுகிறார். பாஜக அரசாங்கம் கல்வியில் அறிவியலுக்குப் புறம்பான கருத்துகளை பாரம்பரியம் என்ற பெயரில் புகுத்துகிறது. தேசிய கல்விக் கொள்கை NEP 2020 பிற்போக்குக் கருத்துகளையும் வியாபாரமய நோக்கத்தையும் கொண்டுள்ளது. ஆனால் இவற்றை எதிர்த்து இடதுசாரி ஜனநாயக இயக்கம் வலுவாக எழுப்பப்படவில்லை. இந்தப் பின்னணியில், தோழர் சிப்தாஸ் கோஷின் சிந்தனையை மக்களிடம் எடுத்துச் செல்லாமல் சோசலிசப் புரட்சியை நடத்துவது சாத்தியமல்ல. எனவே மக்களிடம் செல்லுங்கள். தோழர் சிப்தாஸ் கோஷ் படிப்பினைகளை பரப்புங்கள்.

தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களுக்கு செவ்வணக்கம். எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) நீடூழி வாழ்க என்ற முழக்கத்துடன் தோழர் ஜெய்சன் தனது சிறப்புரையை முடித்தார்.

*சர்வதேசப் பண்ணுடன் பொதுக்கூட்டம் முடிவடைந்தது* ■

# தைவான் . . .

*4ம் பக்கத் தொடர்ச்சி*

உத்தரவாதப் படுத்த முடியாது. அமெரிக்காவை ரஷ்யாவும் சீனாவும் அன்று எதிர்த்த அதே காரணத்திற்காக இன்று எதிர்க்க வில்லை. ஜப்பான், ஐரோப்பிய யூனியன் நாடுகள் அமெரிக்காவுடன் எப்படி முரண்படுகின்றதோ அதைப் போலவே ரஷ்யாவும் சீனாவும் அமெரிக்காவை எதிர்க்கின்றன. இவை, ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையே தோன்றும் முரண்பாட்டின் விளைவாகும்.

உலக சமாதானத்தை நிலைநாட்ட நன்கு திட்டமிட்ட, அமைப்புரீதியாக உருவாக்கப்பட்ட, உலக அளவிலான ஏகாதிபத்திய எதிர்ப்பு சமாதான இயக்கத்தை வளர்த்தெடுக்க வேண்டும். ஜனநாயக எண்ணம் கொண்ட உலக மக்களை புரட்சிகரத் தலைமையின் கீழ் ஒருங்குதிரட்டி தத்தமது நாடுகளின் ஆட்சியாளர்கள் மீது மக்கள் போராட்ட அழுத்தத்தை கொடுக்க வேண்டும். ஏகாதிபத்திய நாடுகளிடம் பலம்வாய்ந்த பேரழிவு ஆயுதங்கள் இருக்கலாம். ஆனால் மக்கள் கையில் வெல்லற்கரிய ஆயுதமாக மார்க்சிசம் லெனினிசம் என்ற சித்தாந்தம் இருக்கிறது. லெனின், ஸ்டாலின், மா சேதுங்கிற்குப் பிறகு அந்தச் சித்தாந்தத்தில் குருச்சேவ், கோர்பச்சேவ், டெங் சியோபிங் ஆகியோர் ஏற்படுத்திய குழப்பங்களைத் தெளிவு படுத்தி மார்க்சிசம் லெனினிசத்தை மேலும் வளர்த்தெடுத்து செழுமையைப் படுத்திய தோழர் சிப்தாஸ் கோஷின் சிந்தனையும் அந்த ஆயுதத்திற்கு வலுசேர்த்துள்ளது. அவரது படிப்பினையை உள்வாங்கி, உலக அளவில் மக்களின் போர் எதிர்ப்பு சமாதான இயக்கத்தை உருவாக்கி உண்மையான கம்யூனிஸ்டுகள் வழிநடத்த வேண்டும். மனித நாகரிகத்தை அமெரிக்கா, ரஷ்யா, சீனா போர் வெறியர்களிடமிருந்து காக்க இக்கடமையை நிறைவேற்றுவது இத் தருணத்தின் தலையாயத் தேவையாகும் ■

# ஏஐகேகேஎம்எஸ் முதல் தமிழ்நாடு மாநில மாநாடு . . .

1ம் பக்கத் தொடர்ச்சி

ஏற்படுத்தும் பணிகள் தற்போது மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

புதுக்கோட்டை மாவட்டம் மணமேல் குடியில் கலந்தாலோசனை கூட்டம் நடைபெற்றது. ஆவுடையார்கோவில் தாலூக்காவைப் பொறுத்த வரையில் சேமங்கோட்டை, தாழனூர், கூடலூர் ஆகிய கிராமங்களில் குடிநீர், மின்சாரம், ஏரிகள் தூர்வாருதல் உள்ளிட்ட கிராமப் பிரச்சினைகள் நமது போராட்டத்தின் வெற்றியடைந்திருக்கின்றன. இதுபோலவே, திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு தாலூகா கிராமங்களில் குடிநீர், பாசன நீர், சாயப்பட்டறை மாசு ஏற்படுவது நான்குமுனை மின்சாரம் வேண்டியும், மதுவுக்கு எதிராக போன்ற பிரச்சினைகள் தொடர்பாக நமது சங்கத்தின் தலைமையில் கிராம மக்கள் அரசாங்கத்தின் அடக்குமுறையை எதிர்த்து போராடிக்கொண்டிருக்கின்றனர். வைகை, சோத்துப்பாறை, மஞ்சளாறு அணைகளிலிருந்து வரும் உபரிநீரை அருகமையில் இருக்கும் கண்மாய்களுக்கு திருப்பிவிடக் கோரும் 9000க்கும் மேற்பட்ட விவசாயிகள் கையொப்ப மிட்ட மனுவை மாவட்ட அதிகாரிகளிடம் சமர்ப்பித் திருக்கிறது. மேலும், கிராமத்துக்குப் பாதிப்பை விளைவிக்கும் சூரியஒளி மின்திட்டத்தை எதிர்த்த ஆர்ப்பாட்டத்தை மக்கள் நடத்திக் காட்டி யிருக்கின்றனர்.

மேலும், அகில இந்திய விவசாய சங்கங் கங்களின் ஒருங்கிணைப்பு குழு (ஏஐகேஎஸ்சிசி) மற்றும் சம்யுக்த கிசான் மோர்ச்சா (எஸ்கேஎம்) ஐக்கிய விவசாயிகள் முன்னணி அமைப்புகளின் தமிழ்நாடு கமிட்டியில் நம் அமைப்பு ஓர் முக்கிய அங்கம் வகித்து கூட்டுப் போராட்டங்களில் தொடர்ந்து ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது.

இந் நிலையில் வருகின்ற 2023ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் நம் அமைப்பின் மூன்றாவது அகில இந்திய மாநாடு கொல்கத்தாவில் நடைபெறவிருப்பதையொட்டி தமிழ்நாட்டில் திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு நகரத்தில் 03.09.2022 அன்று ஏஐகேகேஎம்எஸ் அமைப்பின் தமிழ்நாடு முதல் மாநில மாநாடு நடைபெற்றது.

மாநாடு நாளன்று காலை சுமார் 10.30 மணியளவில் பல மாவட்டங்களிலிருந்து திரண்டு வந்த நூற்றுக்கணக்கான விவசாயிகள் ஏஐகேகேஎம்எஸ் அமைப்பின் பதாகைகளை ஏந்தியவண்ணம் வத்தலக்குண்டு பேருந்து நிலையத்திலிருந்து மாநாட்டு அரங்கை நோக்கி ஊர்வலமாகச் சென்றனர். ஊர்வலத்தில் சென்ற விவசாயிகளின் மத்திய மாநில அரசாங்கங்கள் விவாசாயிகளின் பல்வேறு பிரதான கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றித்தர வேண்டுமென்று கோஷங்கள் எழுப்பினர். வைகை, சோத்துப்பாறை மற்றும் மஞ்சளாறு உபரிநீரை வறண்ட பகுதிகளுக்கு திருப்பிவிட வேண்டுமென்றும், காவிரியின் உபரிநீரை குண்டாறு மூலமாக விட வேண்டுமென்றும்,




**விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்கள் மாநாட்டு பேரணி**

விவசாய விளை பொருளுக்கு குறைந்தபட்ச ஆதார விலை சட்டமாக்கிட வேண்டுமென்றும், எல்லா விளைபொருட்களை அரசே மொத்த கொள்முதல் விற்பனை செய்ய வேண்டுமென்றும், விலைவாசியை குறைக்க வேண்டுமென்றும், விவசாயிகளுக்கு பொதுத்துறை நிறுவனங்கள் மூலம் இன்சூரன்ஸ் வழங்க வேண்டுமென்றும், விவசாயிகளுக்கு எல்லா நேரங்களிலும் 4 முனை மின்சாரம் வழங்க வேண்டுமென்றும் கோஷங்களை எழுப்பினர். ஊர்வலம் மாநாட்டு அரங்கை வந்தடைந்ததும் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. சுமார் 300க்கும் மேற்பட்டவர்கள் கூடியிருந்த அந்த அரங்கத்தில் மாநாட்டு நிகழ்ச்சிகள் காலை 11.00 மணியளவில் துவங்கியது.

மாநாட்டுக்கு தோழர் சந்திரபோஸ் தலைமை ஏற்றார். சங்கத்தின் அகில இந்திய துணைத் தலைவர்கள் தோழர் ஹெச் டி திவாகர், தோழர் ஆ ரெங்கசாமி மற்றும் அகில இந்திய கவுன்சில் உறுப்பினர் தோழர் நாகம்மா ஆகியோர் உரையாற்றினர். சிறப்புரையாற்றிய தோழர் ஹெச் டி திவாகர் இந்திய நாட்டு விவசாயிகள் பிரச்சினைகள் குறித்தும் அதற்கான தீர்வு குறித்தும் விளக்கினார். அரசியல் ரீதியில் விவசாயிகள் அனைவரும் விழிப்புணர்வு பெற வேண்டும் என அவர் கூடியிருந்த விவசாயிகள் மத்தியில் அறைகூவல் விடுத்தார்.

அடுத்த நிகழ்வாக இரண்டு தீர்மானங்கள் முன்மொழியப்பட்டன. முதலாவதாக வைகை அணை, சோத்துப் பாறை அணை உபரி நீரை கிளை கால்வாய் மூலமாக கொண்டுவந்து எழுவணம்பட்டியில் உள்ள கண்மாய்களுக்கு திருப்பிவிட வேண்டும் என்றும் 15 ஊர்களுக்கு உபரிநீரை திருப்பிவிட கோரும் தீர்மானத்தை வத்தலக்குண்டு வட்டாரக் கமிட்டி தலைவர் தோழர் சதிஷ் அவர்கள் பேசினார். அவ்வாறு செய்யப்பட்டால் சுமார் 40,000 விவசாயக் குடும்பங்கள் வாழ்வாதாரம் பெறுவார்கள் என்பதை அவர் வலியுறுத்தினார். இரண்டாவதாக காவிரி வைகை குண்டாறு இணைப்பு தீர்மானத்தை வத்தலக்குண்டு வட்டாரக் கமிட்டி உறுப்பினர் தோழர் சுரேஷ் முன்வைத்தார். இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் கிட்டத்தட்ட 3,38,000 (3.38 லட்சம்) ஹெக்டேர் நிலப்பரப்பு பயனடையும் என்றார். மேற்கண்ட தீர்மானங்கள் ஒருமானதாக நிறைவேற்றப்பட்டன.

இறுதியாக தமிழ் நாடு ஏஐகேகேஎம்எஸ் அமைப்பின் புதிய மாநில அமைப்புக் கமிட்டி கீழ்க்கண்டவாறு தேர்ந்தெடுக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| தலைவர் | : | சந்திரபோஸ் |
| உபதலைவர்கள்: | | சதிஷ்குமார், நடராசன், அல்லிமுத்து |
| செயலாளர் | : | சுருளிராஜன் |
| உபசெயலாளர்கள் : | | ராதிகா, சுரேஷ் |

மாநில கவுன்சில் உறுப்பினர்கள் :

கோவிந்தராசு, ஜேம்ஸ், சத்தியவதி, சுந்தரமூர்த்தி, பெரியசாமி, நடராஜன், வாஞ்சிநாதன், முருகன், வெள்ளைமணி, கண்ணன், செங்கல்வராயன், செல்லத்துரை, அழகர்சாமி, பி எஸ் பாண்டியன், நல்லு, வீராசாமி, பொய்யாமலை, சிங்ககண்ணு, ஆசைத்தம்பி, திருவேங்கடம், சாத்தையா, கணேசன், காளிமுத்து.

மாநாட்டிற்கு வந்திருந்த விவசாயிகள் ஏஐகேகேஎம்எஸ் அமைப்பை மாநிலம் முழுவதும் வளர்த்தெடுக்கும் உறுதியோடு சென்றனர் ■

# திறன் மேம்பாடு என்ற பெயரில் அண்ணா பல்கலைக்கழகத்தின் பொறியியல் கல்வியின் தரத்தைக் குறைப்பதை ஏஐடிஎஸ்ஓ வன்மையாகக் கண்டிக்கிறது

*திறன் மேம்பாடு என்ற பெயரில் அண்ணா பல்கலைக்கழகத்தின் பொறியியல் கல்வியின் தரத்தைக் குறைக்க முயற்சிக்கும் நடவடிக்கையை வன்மையாகக் கண்டித்து ஏஐடிஎஸ்ஓவின் தமிழ்நாடு மாநில கமிட்டி 22.08.2022 அன்று வெளியிட்ட அறிக்கை:*

அண்ணா பல்கலைக்கழகம் தன்னுடைய பாடத்திட்டங்களில் ஒவ்வொரு பருவத்திலும் திறன் வளர்ச்சி பாடங்களை கொண்டு வருவதாக அறிவித்துள்ளது. இது குறித்து முடிவெடுப்பதற்காக தொழில் துறை நிபுணர்களையும் கல்லூரி முதல்வர்களையும் கலந்து ஆலோசித்து வருவதாக அறிவித்துள்ளது. இது குறித்து அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கம் சில கருத்துகளை முன் வைக்கிறது.

பொறியியல் கல்வி என்பதே அறிவியல் தொழில்நுட்பம் சார்ந்த கல்வி இதில் திறன் வளர்ச்சி பாடங்கள் என்பது உண்மையில் எதைக் குறிக்கிறது? அடிப்படைத் தொழிற்திறன்களை மட்டும் கற்றுத் தருவதற்காக ஐடிஐ, பாலிடெக்னிக் போன்றவை இருக்கின்றது. உயர் தொழில் நுட்பத்தையும், அதற்கான ஆராய்ச்சியை நடத்தி பொறியியல் கண்டுபிடிப்புகளையும் நிகழ்த்து வதற்காகத்தான் பொறியியல் கல்வி இருக்கிறது. அப்படி இருக்கையில் ஒவ்வொரு பருவத்திலும் திறன் வளர்ச்சி பாடங்கள் என்ற பெயரில் கொண்டு வருவது ஏற்கனவே இருக்கின்ற பாடங்களை குறைத்தோ சுருக்கியோ பயிற்சி நுட்பம் சார்ந்த பாடங்களை கொண்டு வரப்படுமானால் அது பொறியியல் கல்வி தரத்தை வீழ்த்திவிடும். பொறியியல் பட்டதாரிகளுக்கு வேலை கிடைக்க வில்லை என்பதை காரணமாக கூறி அதற்காக உடனடியாக வேலை வாய்ப்பு கிடைப்பதற்காக என்ற பெயரில் திறன் மேம்பட்டு பாடங்களை கொண்டுவர முயற்சிக்கின்றனர். பொறியியல் படிப்பே வேலை சார்ந்த படிப்புதான். அப்படி இருக்கையில் அதற்குள் மேலும் வேலை சார்ந்த பாடங்கள் என்றால் என்ன பொருள்?

ஏற்கனவே அண்ணா பல்கலைக்கழகத்தில் உட்பட பொறியியல் கல்லூரிகளில் பேராசிரியர் பற்றாக்குறை நிரப்பப்படாமலே இருக்கிறது. நிரந்தரமான பேராசிரியர்களை காலி பணியிடங்களை நிரப்புவது ஆய்வக வசதி போன்ற உள்கட்டமைப்பை சரி செய்வது இதுவே மாணவருடைய அறிவுத்திறன் வளர்ச்சி பெறுவதற்கு அடிப்படையான ஒன்று.

காலி பணியிடங்களை நிரப்பாமல் திறன் வளர்ச்சி பாடங்கள் கற்றுத் தருவதற்கான பேராசிரியர் நியமனம் பற்றி எந்த செய்தியும் இல்லை என்பது ஒருவேளை இதை தனியாரிடம் ஒப்படைப்பதாக இருக்குமானால் கல்வி கட்டணங்களும் ஒவ்வொரு பருவத்திலும் கூடும்.

இது தொடர்பாக அண்ணா பல்கலைக்கழக துணைவேந்தர் கருத்து தெரிவித்தபோதே அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கத்தின் கருத்துக்களை தமிழக உயர்கல்வித்துறைக்கும், அண்ணா பல்கலைக்கழக துணைவேந்தருக்கும் கோரிக்கை மனுவாக சமர்பித்தோம். ஆனால் இதுவரை எந்த ஒரு பதிலுமில்லை. எனவே தேசிய கல்விக் கொள்கை 2020ன் பாதகமான அம்சங்கள் அண்ணா பல்கலைக் கழகத்தின் அறிவிப்பில் இருப்பதாக கருதுகிறோம். உடனடியாக கல்வியாளர் களையும் மாணவர் சங்கங்களையும் அழைத்து பேசி முடிவு எடுக்குமாறு வேண்டுகிறோம் ■

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication : First week of Every Month

பாட்டாளி சிந்தனை

Registered with the Registrar of Newspapers for India No : 62018/1988

# பில்கிஸ் பானுவிற்கு நீதி வழங்கு!

## பெண்கள் மீது குற்றங்கள் புரிவோருக்கு கடுமையான தண்டனைவழங்கு!

### அகில இந்திய மகளிர் கலாச்சார சங்கம் (AIMSS)

நாடு விடுதலை அடைந்த 75வது சுதந்திர தினத்தில், பாலியல் வன்கொடுமையுடன் கொலைகளையும் செய்த குற்றவாளிகள் சிறையில் 'நன்னடத்தையின்'பேரில் விடுவிக்கப்பட்டிருப்பது நாட்டையே அதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருக்கிறது. இது யாருக்கான சுதந்திரம் என்ற கேள்வியும் எழுகிறது. குற்றவாளிகளைப் போற்றி கோத்ராவில் உள்ள விஷ்வ இந்து பரிஷத் (VHP) அலுவலகத்தில் மாலைகள் மற்றும் இனிப்புகளுடன் அவர்களை வரவேற்று கொண்டாடியதை ஊடகங்களில் பார்த்தபோது நாம் நாகரிக சமுதாயத்தில்தான் வாழ்கிறோமா என்ற சந்தேகமும் எழுகிறது.

2002இல் குஜராத்தில் கோத்ரா ரயிலில் ஒரு பெட்டியில் ஏற்பட்ட தீ விபத்தில் சுமார் 50க்கு மேற்பட்ட கரசேவகர்கள் இறந்தனர். இதனை, சில முஸ்லிம்கள்தான் தீ வைத்து இந்துகளைக் கொன்றுவிட்டனர் என இந்து மதவெறி சக்திகள் புரளியை பரப்பிவிட்டு மக்களிடையே மதவெறியைத் தூண்டி நூற்றுக்கணக்கில் சிறுபான்மை முஸ்லீம் மக்களைக் கொடூரமாகக் கொன்றனர். பல பெண்கள் வன்கொடுமைக்கு உள்ளாக்கிக் கொல்லப்பட்டனர். கோத்ரா மதவெறி படுகொலை என வரலாற்றில் பதிந்து விட்ட அந்தக் கறுப்பு நாட்களை மக்கள் மறக்கவில்லை. அச்சம்பவத்தில் 5மாத கர்ப்பிணியாக இருந்த பில்கிஸ் பானு எதிர்கொண்ட பயங்கரத்தையும், அதிர்ச்சியையும் கூட யாரும் மறந்துவிட முடியாது. அவர் கூட்டு பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு, அவரது கண் முன்னே அவரது 3 வயது மகள் தரையில் அடித்துக் கொல்லப்பட்டாள். கண்முன்னே அவரது குடும்ப உறுப்பினர்கள் 7 பேரும் கொல்லப்பட்டனர். அந்தத் துயரத்தை தாங்கிக்கொண்டு துணிச்சலுடன் அவர் நீதிமன்றத்தை நாடி நீதிக்காகப் போராடினார். இந்த வழக்கில், 2008ஆம் ஆண்டு மும்பையில் உள்ள சிறப்பு மத்திய புலனாய்வு நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்ட 11 பேருக்கும் ஆயுள் தண்டனை விதித்தது. ஆனால் 75வது சுதந்திரதினத்தை முன்னிட்டு இவர்களுக்கு தண்டனைக் குறைப்பு கொள்கையின் கீழ் குஜராத் அரசு 11 பேரையும் இவ்வாண்டு ஆகஸ்ட் 15ம் தேதி விடுதலை செய்துள்ளது. அவர்களுக்குத்தான் தியாகிகளை வரவேற்பதுபோல் மாலை மரியாதையுடன் வரவேற்றிருக்கின்றனர்! அவர்களை கடவுளைப் போல் கருதி காலில் விழுந்து வணங்கியிருக்கின்றனர்.

நம் நாட்டில் பெண்கள், பெண் குழந்தைகள் மீதான குற்றங்கள் ஆபத்தான விகிதத்தில் அதிகரித்து வருகின்றன. நெஞ்சை உலுக்கும் கள்ளக்குறிச்சி சம்பவம் ஒரு சமீபத்திய எடுத்துக் காட்டாகும். இவ்வேளையில், அரசின் இத்தகைய நடவடிக்கை குற்றவாளிகளுக்கு மேலும் துணிச்சலை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை. தண்டனை பெறக் காரணமான பில்கிஸ் பானுவை இவர்கள் மீண்டும் தாக்கமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்? இந்த விடுதலையைக் கண்டு பீதியில் உறைந்துள்ள பில்கிஸ் பானு கூறுகிறார்: "ஒரு பெண்ணுக்கான நீதி எப்படி இந்த முடிவை சந்திக்கும்? ...இந்தக் குற்றவாளிகளின் விடுதலை என்னிடமிருந்து அமைதியைப் பறித்து, நீதியின் மீதான நம்பிக்கையை அசைத்துவிட்டது. எனது வருத்தமும், அலைபாயும் நம்பிக்கையின்மையும் எனக்காக மட்டுமல்ல, நீதிக்காகப் போராடும் ஒவ்வொரு பெண்ணுக்கும் ஏற்பட்டுள்ளது."

இந்த விடுதலை, கொடூர பாலியல் வன்கொடுமையும் கொலையும் செய்த, ஆளும் சக்திகளின் ஆதரவு பெற்ற குற்றவாளிகள் இறுதிவரை உண்மையிலேயே தண்டிக்கப் படுவார்களா என்ற பெருத்த கேள்வியை மீண்டும் எழுப்பி, "பாதிக்கப்பட்ட பெண்களுக்கான நீதி" நமது சமூகத்தில் இன்றும் கானல் நீராகவே உள்ளது என்பதைக் காட்டுகிறது. நீதிமன்றங்களை நாடுவதுடன் நின்றுவிடாமல் அநீதிக்கெதிராக நாம் ஒவ்வொருவரும் அணிதிரண்டு குரல் கொடுத்தால் மட்டுமே இது போன்ற குற்றங்களை நடக்காமல் தடுக்க முடியும்.

எனவே, குற்றவாளிகளின் ஆயுள் தண்டனைக் காலத்தை குறைத்து அறிவித்த விடுதலையை ரத்துசெய்து உரிய தண்டனையை உறுதி செய்ய வேண்டும். பாதிக்கப்பட்டவரின் பாதுகாப்பையும் குஜராத் அரசு உறுதி செய்யவேண்டும். மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஜனநாயக, மதச்சார்பற்ற சமுதாயத்தைப் படைத்திட விரும்பும் நேர்மையான எண்ணம் கொண்ட அனைவரையும் போராட முன்வருமாறு அகில இந்திய மகளிர் கலாச்சார சங்கம் அழைக்கிறது ■




மதுரையில் AIWA, NSW, AIDWA, AIMSS இடதுசாரி பெண்கள் அமைப்பு சார்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டம்



சென்னை, சைதாப்பேட்டையில் அனைத்து பெண்கள் கூட்டமைப்பு சார்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டம்




நெய்வேலியில் ஏஐஎம்எஸ்எஸ் பிரச்சாரம்

## மத்திய அரசாங்கத்தின் மக்கள் விரோத மின்சார மசோதாவைத் திரும்பப்பெறக் கோரி ஆர்ப்பாட்டம்




அகில இந்திய மின்சார நுகர்வோர் சங்கத்தின் சார்பில் சென்னையில் 08.08.2022 அன்று நடைபெற்ற ஆர்ப்பாட்டம்




டெல்லியில் போராடிய விவசாயிகளுக்கு மத்திய அரசாங்கம் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றக் கோரி எஸ்கேஎம்மின் தெருமுனைக் கூட்டம் சென்னையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் எஸ்கேஎம்மின் தமிழ்நாடு ஒருங்கிணைப்பாளர் தோழர் பாலகிருஷ்ணன் உரையாற்றுகிறார்




அகில இந்திய விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்கள் சங்கத்தின் சார்பில் சேலத்தில் 09.08.2022 அன்று நடைபெற்ற ஆர்ப்பாட்டம்



ஆகஸ்ட் 11 தியாகி **குதிராம் போஸ்** 114வது நினைவு தினம் சென்னையில் ஏஐடிஎஸ்ஓ அனுசரிப்பு

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்), தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: ஆ ரெங்கசாமி அலுவலகம் : பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 007 அச்சகம் : ஸ்ரீ அய்யனார் பிரிண்டர்ஸ், எண் 10, சுப்பாராவ் நகர், 2வது தெரு, சூளைமேடு, சென்னை 600 094, **ஆசிரியர்: ஆ ரெங்கசாமி**

Published by: A Rengasamy on behalf of Socialist Unity Centre of India (Communist), Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 007 and Printed at Sri Aiyanar Printers, No.10, Subha Rao Nagar, 2nd Street, Choolaimedu, Chennai 600 094. **Editor : A Rengasamy**
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : **www.sucicommunist.org**